[illegible]

V 6 No. 12 23 Comm 1433

JL
M211, N28 KN
M33.6.112
189145

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா

உள் நாடு ரூ. 7 8 0

புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஞு மார்ச் மீ 23உ [No. 12

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 221

2. அப்பர் (64 கலை-வியாகரணம்-குற்றியலுகரம்)
E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 223

3. தேவகி (ஓர் நாவல்)
K. இராஜகோபாலன் 224

4. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 8-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 226

5. வாலி வதை (ஓர் ஆராய்ச்சி)
V. V. ஸ்ரீநிவாஸாச்சாரியார், B.A.B.L. 227

6. காற்றுமழை (அங்கம் 1. களம் 2.)
Shakespeare's - Tempest 229

7. வில்லிபாரத விளக்கம் (சூது போர்ச் சருக்கம்)
T. S. நடராஜப் பிள்ளை B. A. B. L. 230

8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலமையர் B.A.,B.L. 232

9. தமிழ்ப் பாடம்
(நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 234

10. யாப்பிலக்கணம் (செய்யுள்—ஆசிரியப்பா)
வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 237

11. வர்த்தமானம் 239

கலாநிலயம்

விற்பதற்கே வேண்டும் விலை.

18945

உலகனைத்தையும் தன்னொரு சொல்லாற் செலுத்திய உரோமப் பெருமகன் ஜூலியஸ் ஸீஸரை, சதியாளர் சிலர் கரவுக்கொலை செய்து சாய்த்துவிட்டு, "கொடுமை இடிந்தது; இனி, சுதந்தரம், சமத்துவம் விடுதலை" என்றென்று ஆரவாரஞ் செய்தவர்களாய், தாம் குத்திய புண்ணினின்று கொப்புளிக்குஞ் செங்குருதியில் கைகளைக் கழுவிக்கொண்டே, அச்சதியாளர்களில் முதன்மையாய் நின்ற ப்ரூட்டஸ், காஸ்ஸியஸ், என்னுமவ் விருவரும் உரைத்த சில சொற்கள் இவை—

காஸ்ஸியஸ்:—இன்னும் பிறந்திரா நாடுகளினும் அறிந்திரா மொழிகளினும், எத்துணைக் காலங்களுக்கப் பால்,உயரியஇக்காட்சி மீண்டும் நடிக்கப்பெறுமோ!

ப்ரூட்டஸ்:—புழுதியினும் பெரியதொரு மதிப்பின்றி இப்பொழுது பாம்பேயின் பீடமிசை நெடிது கிடக்கின்ற ஸீஸர் எத்துணைமுறை விளையாட்டிற்கு இரத்தம் வடிக்க நேர்வானோ!

காஸ்ஸியஸ்:—எத்துணைமுறை அது நிகழ்கின்றதோ அத்துணைமுறை நம் கூட்டத்தினர், தம் நாட்டிற்கு விடுதலை யளித்தவர்களென்று அழைக்கப்படுவார்.

இது, மகாகவி ஷேக்ஸ்பியர் அணிந்திருக்கும் புலமைப் பெருமுடியிற் பொலிகின்ற இணையிலா வொளி திகழ் இரத்தினங்களில் ஒன்று. எட்டுத்திசைக்கும் மூன்று காலத்திற்கும் ஏற்கும் உண்மைகளை உணர்ந்துரைக்கும் மதியின் ஆற்றலாற் சான்றவர் இந்த ஷேக்ஸ்பியர் அனைய மேன்மையோர். இந்த உரை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோமில் நிகழ்ந்ததென்று முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் எழுதினார். ஷேக்ஸ்பியருக்குப் பிறகு அக்காட்சி மீண்டும் மீண்டும் பன்முறை பல்வேறு இடங்களில் நடிக்கப் பெற்றன. இவைகளில், ருஷ்யாவின் செய்தியே தற்காலம் எல்லோர் மனத்தையுங் கதுவி நிற்கின்றது.

அக் கொடுங்காட்சி சிறிது காலத்திற்குமுன் மீண்டும் ருஷியாவில் நடிக்கப் பெற்றது. அந்த ஸீஸர் ருஷியாவிற்கு அரசனாய்வந்து, இம்முறை தன் மனைவி மக்களோடும், மீண்டும் தன் இரத்தத்தை விளையாட்டிற்கு வடித்தான். அதனைச் செய்வித்த லெனின் முதலியோர் தம் நாட்டிற்கு விடுதலை யளித்தவர்களென்று பாராட்டப் பெறுகின்றனர். கேட்போர் குலைநடுங்கக் கொடுங்கொலை யொன்று நிகழ்ந்த தென்பது நிச்சயம். மற்று, அதனால் விளைந்த விடுதலை யாதோ, எவ்விடத்துந் தோன்றாச் சான்றாக நின்று நோக்கும் இறைவனுக்கே வெளிச்சம்!

அரசனும், அவன்பரிஜனங்களும், அவனின்றுஅதிகாரம் பெற்றிருப்பவர்களும் குடிகளுக்கு எத்துணை எத்துணைக் கொடுமைகள் இழைத்திருந்தினர் என்பதை எடுத்துக்காட்டி, அத்தொல்லைகள் இப்பொழுது ஒழிந்தனவென்றுஉரைத்து, "எல்லாரும் ஒரு நிறை, எல்லாரும் ஒரு விலை" என்னுமொரு பெருமிதத்தில் இறுவதால் யாதும் பயனில்லை. உயரியவோர் தத்துவமாய் இவ்வாக்கியத்தை உவகையுடன் உரைக்கின்றாராளுலும், நிறையும் விலையும் விற்கக்கிடக்கும் பொருள்களுக்கே உரியவை என்பதை மறத்தல... தம்மை விற்றுக்கொள்ள நிற்கின்ற ம...ற்றங்களை நிறையாயினுலென், வேறு வேறுகுறிக்கப்படும்.

என்! இப்படி ஒரே நிறையும் ஒரே விலையும் உடையவர் எல்லாரும் தம் நாட்டு மன்னர்கள்தாம் ஆயினாலென்! ஒரு கூடை உருளைக்கிழங்கில் ஒவ்வொன்றுந் தன்னைத் தன்கூடை மன்னனென் றழைத்துக்கொள்ளட்டுமே. அவைகளை வாங்கித் தின்பதற்கு வந்திருப்பவனே கேட்டுச் சிரிக்கின்றான். ஆன்மாவைச் சிற்றின்பங்களிற்கு மாறாக விற்றுவிடச் சந்தை கூடியிருக்கும் நாம், "ஒரு நிறை ஒரு விலை" என்று கூவி, "எல்லாரும் தம் நாட்டு மன்னர்" என்று மார்தட்டிக்கொள்ளும்போது, நம்மை வாங்கித் தின்ன வந்து நிற்கும் ஆசை அழுக்காறு அனைய பேய்கள் இடியிடி யெனச் சிரிக்கு மொலியைக் கேளாத காதுகள் நீளத்தால் பெற்றபயன் பெரிதொன்று மில்லை.

ருஷ்யாவைப்பற்றி நாமொன்றுமிங்கு விரிவாக வரைய நினைந்திலம். உயிரினை உகுத்த அம்மன்னனது ஆட்சியால் 'விளைந்தன'வெனக் கூறப்படுங் கொடுமைகள் யாவையேயாயினும், அரசன் இரத்தம் வடித்தது கொடியவோர் விளையாட்டாய் முடிந்ததோ அல்லது விளைபயன்தான் வேறேதேனு முண்டோ என்பதைச் சிந்திப்பதற்குதவியாய் ஒருவிடயத்தை இங்கு உரைப்பது போதும். "ஆற்றல் நல்லறமல்ல தில்லாமையால், ஏற்றமல்ல திழிதக வில்லையே" என்று கோசலதேசத்து மாந்தர்தமக்குள் வழங்கிய சமத்துவத்தைக் காட்டினார் ஒரு கவிவாணர். ருஷியர்கள் தங்கள் விடுதலை சுதந்தரம் சமத்துவம் முதலியவைகளைத் தெரிவித்துக்கொள்ளும் விதங்களில் ஒன்று என்னவெனில், அவரவர் தத்தமக்கு விருப்பமான பெயர்களை மனம்போல் வைத்துக்கொளலாம் எனும் ஒரு புதிய சட்டமே. கணவனுடைய பெயரை மனைவியும், தந்தையினுடைய பெயரை மைந்தனும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென் றிருந்த அவ்வழக்கம் அடிமைப்புத்தியைக் காட்டுகின்றதென்ற சீற்றத்தால் கடிந்தகற்றித் தம் விடுதலையை விளம்பவேண்டுவது அவசியமாகக் கருதுவாராயின், மன்னவன் வடித்த இரத்தத்தை விளையாட்டெனக் கொள்வதோ, அல்லது, விளைவுடைய வினையின்பால் வைத்தற்கேற்றதோ, சிந்தனை சிறிதுடையோர் தெளிந்துகொள்ளல் அருமையன்று. கருப்பமுற்ற மாதர்களுக்குத் தொழிற்சாலைகளில் எத்தனை வசதிகள் அளித்திருக்கின்றனரென ருஷ்யாவின் மேன்மையைப் பாராட்டி மகிழ்கின்ற நம்மனோர், மெல்லியல் மாதரார் தொழிலும் உழைப்பு மில்லாமலே குடிவாழ்க்கை நடத்த மாட்டாமையின் இழிவினைக்காணுமற் கழிவதென்ன விந்தையோ அறிகிலேம். கடவுளொன்னுங் கொள்கையாற் கெட்டோமென்பதனினும் விளையாட்டுவார்த்தை வேறொன் றுளதோ!

இந்நிலையில் உள்ளவர்கள், அவர்தாம் ருஷ்யர்களாயினும் வேறு யாவரே யாயினும், தாம் ஆளாகி வருந்துவதாகக் கருதுகின்ற கொடுமைகளினின்று ஒருநாளும் ஒருவகையினும் விலகுவது இயலாத காரியம்.

ஏனெனில் இதற்கோர் கடக்கரிய காரணம் இருக்கின்றது. புரட்சிப் புத்தியால் புகுகின்றவோர் கொலை செறிந்த கோலத்தை விலக்கி நிரந்தர வாய்மையாளர் ...ங்கு நினைந்துரைத்த வாக்கியங்களின் தத் ... இத்திருந்தாலன்றோ வாழ்வதற் குண் ...ன்படி, பிறர் நமக்கோர் கொடுமை செய்கின்றார் அல்லது செய்யவல்லவரா யிருக்கின்றார், என்னும் பொய்யெண்ணம் ஒழிதல் வேண்டும். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்றார் நம் பொருள் செறிந்த தமிழின் பண்டைப்புலவர் ஒருவர். இது யாவருக்கும் ஒக்குமன்றோ. ஒருவன் மற்றொருவனுக்குக் கேடுசெய்கின்றான் என்பதேபோல், ஒரு சாதியார் மற்றொரு சாதியாருக்கும், அரசன் குடிகளுக்கும், கொடுமை செய்ய அதனால் துன்பம் விளைகின்றதென்று உரைப்பதெல்லாம் இப்புறநானூற்றுப் புலவர்தம் கட்டளையின்படி பொய்யே யாகவேண்டுமென்பதற் கையமில்லையே. ஒன்று இது பொய்யாயிருத்தல் வேண்டும்; அல்லது அப்புலவர் ஒன்றும் அறியாத பேதையா யிருக்கவேண்டும். இப்புலவருக்கு என்ன தெரியும் என்றிகழ்ந்து புறக்கணித்தால் புறக்கணிக்கலாம். பிறகு, "எந்தந் தமிழ்ப்புலவர்," என்றும், "தூயநறுஞ் சங்ககாலம்" என்றும், "நந்தந் தமிழர் நாகரிகம்" என்றும் வீணுரைகள் வளர்ப்போர் வாய்களெல்லாம் அடங்கவேண்டுமல்லவோ. அப்புலவர்தம் அறிவையும் திறமையையும் புகழ்ந்துகொண்டே அன்னோர் அறவுரைகளைப் புறக்கணித்தல் நியாயமாகுமா, நன்மதி நுட்பத்திற் கழகு தானாகுமா.

புறநானூற்றுப் புலவர் படிற்றுரைகள் பேசினாரல்லர். அதனைக் கல்லாதாரும், கற்றும் பயன்பெறமாட்டாத் தீவினையால் தளர்ந்திருப்போருந்தான் ருஷியப் புரட்சியிலடங்கிய தத்துவமென்றொன்றைப் பொருளின்றிப் புகன்றுநின்று பாராட்டுவார். இவர் கிடக்க, வித்தகர் கருத்தெலாம் ஒரே வழியைப்பற்றி நாடும். அமரிக்க வித்தகர் எமர்ஸனும், பெல்ஜிய வித்தகர் மாரிஸ் மேடர்லிங்க் என்பவரும் நம் கலாநிலயவாசகர்களுக்கு, இதுகாறும் நாம் பலவிடங்களில் அவர்தமைப்பற்றிக் கூறியவைகளிலிருந்து நெருங்கிய உறவினர்களாய் அமைந்திருத்தல் வேண்டும் என மதிக்கின்றோம். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் அவ்விழுமிய வாய்மையை அவ்விரு வித்தகர்களும் அமைவுற விளக்கியிருக்கும் செம்மையை இதன்முன் இவ்விதழ்களில் எடுத்துக் காட்டியிருக்கின்றோமாதலின், இவ்விடத்தில் அவைகளை விரிவாக வரையப்புகுவது மிகை. "வித்தகமோ விதிவசமோ" என்னுந் தலைப்பின்கீழ்ச் சென்ற வாண்டு முதலாறு மாதங்களில் வரைந்திருக்கின்ற கட்டுரைகளை இவ்வமயம் நம் வாசகர்கள் ஓதிக்கொள்ள வேண்டுமென்று விழைகின்றோம். "உன்னுடைய தகுதிக் கேற்றவாறுதான் உன்னை ஆள்கின்ற அரசும் சட்டங்களும் அமையும்" என வற்புறுத்துவார் எமர்ஸன்; "உன் நெஞ்சத்திருக்கும் கொடுமையே மற்றவர் என்ற தோற்றத்தோடு உன்னைவந்து நலிகின்றதேயன்றி வேறில்லை" என்பார் மேடர்லிங்க். குணம் அறிவு மெய்யுணர்வு அனைய மேன்மைகளின் மாபெரும் சிகரங்கள் போன்ற இவ்விழுமியோர் மொழிகளைக் கேளாமல் வாழ்க்கையை, அரசுமுறையாலும் சட்டங்களாலும் நேருற அமைத்துக் கொடுமையை நீக்குகின்றேன் என்றெழுந்து இந்த ருஷியா புரிந்த இரத்த விளையாட்டை ஷேக்ஸ்பியர் முன்னரே தெரிந்துரைத்த விந்தையை வியப்பதோடு நில்லாமல், அதனைப் பின்பற்ற முயல்வது எத்தாரம் செலுத்தி எங்கு நிறுத்துமோ என்பதை யாவரா லியம்புதற்கியலும்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[207-வது பக்கத் தொடர்ச்சி]

(c) குற்றியலுகரப் புணர்நிலை

குற்றியலுகரம், சார்பொலியாதலால், அதனைச் சார்ந்திருக்கும் மெய்யொடு கெட்டாலன்றிப் புணர்ச்சியில் வருமொழிமுதல் உயிருடன் அது கலந்தொலிக்கும். நிலைமொழி யீற்றின் குற்றியலுகரத்திற்கு முன் வருமொழிமுதலில் யகரம் வரின், பவணந்தி முனிவர் கூறுவதுபோல் அவ் உகரம், இகரமாய் மாறுவதில்லை; மற்று அக் குற்றியலுகர வோசை முற்றத் தோன்றாமல் நிற்க, குறுகிய இகரம் தோன்றி அவ்வோசையில் கலக்கும். இதை

"யகரம் வருவழி யிகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது"
(தொல் - குற்றியலுகரப் புணரியல். 5)

என்பர் தொல்காப்பியனார். உதாரணம்:—

'சுற்றி வண்டியாழ்செயுஞ் சோலையுங்
காவுந் துதைந்திலங்கு
பெற்றி கண்டால்மற்றி யாவருங்
கொள்வர் பிறரிடைநீ
யொற்றிகொண் டாயொற்றி யூரையுங்
கைவிட் டுறுமென்றெண்ணி
விற்றிகண் டாய்மற் றிதுவொப்ப
தில்லிடம் வேதியனே!"
(திருவொற்றியூர் - திருவிருத்தம். 5)

மேற்கண்ட அப்பர் பாசுரத்தில், வண்டு+யாழ்= வண்டியாழ் என்றும், மற்று+யாவர்=மற்றியாவர் என்றும் நேர்ந்த புணர்ச்சியில் தோன்றிய குற்றியலிகரம், நிலைமொழி யீற்றிலுள்ள குற்றுகர வோசையை மிகவும் குன்றச்செய்து அதனுடன் கலந்தொலிப்பதை யுணர்க. இக்குற்றியலிகரம், புணரியல் நிலையிடைத் தானும் குறுகியதால், 'டி', 'றி' இவற்றின் மாத்திரை அரை மாத்திரைக்கு அதிகப்படாமலிருக்கின்றது. இதைத் தொல்காப்பியனார், மொழிமரபிலேயே,

"புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே
யுணரக் கூறின் முன்னர்த் தோன்றும்."
(தொல் - எழு. 35)

என்னும் சூத்திரத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். ஆதலால் குற்றியலுகரம், வருமொழி உயிருடன் கலந்தாலும்சரி, யகரம் வருவதாற் றோன்றும் இகரத்துடன் கலந்தாலும் சரி, அங்கு அதன் ஓசை முற்றும் அற்றுப் போகாமல், அதன் சிறுபாகம் கலந்து விளங்குமென்றறிக. (உ - ம்.)

"அஞ்சுவதியா தொன்று மில்லை
யஞ்ச வருவது மில்லை"
அப்பர்.

தொல்காப்பியனார் குற்றியலுகரப் புணரியலை எழுபத்தெட்டுச் சூத்திரங்களில் வகுத்துக் காட்டுகின்றார். அவற்றுள், அப்பர் தேவார மாணவர்கள் கவனிக்க வேண்டிய சூத்திரங்கள் சிலவே. அவற்றையே இங்கு முக்கியமாய்க் கூறுவோம். அவற்றுள்

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா விறுதியும் உகர நிலையும்"
(தொல் - எழு - 408)

என்பது குற்றியலுகரம் தன் அரைமாத்திரையினுங் குறுகாமல் நிற்பதற்குப் பொதுவிதியாம். (உ-ம்)

திருக்கு வார்குழற் செல்வன சேவடி
யிருக்கு வாய்மொழி யாற்றனை யேத்துவார்
சுருக்கு வார்துயர் தோற்றங்க ளாற்றறப்
பெருக்கு வாரவர் பேரெயி லாளரே.
திருப்பேரெயில் - திருக்குறுந்தொகை 6.

திருக்கு+வார்குழல்=திருக்கு வார்குழல் என்னும் அல்வழியிடத்தும், இருக்கு+வாய்மொழி= இருக்கு வாய்மொழி என்னும் வேற்றுமைக் கண்ணும், உகரம் சந்தியில் அரைமாத்திரையிற் குறுகவில்லை; யாண்டுக் குறுகுமெனின், சந்தியில் வல்லொற்று மிகுகின்ற காலத்திலேயாம். (உ-ம்)

கருத்துத்திக் கதநாகங் கையி லேந்திக்
கருவரைபோற் களியானை கதறக் கையால்
உரித்தெடுத்துச் சிவந்ததன்றோல் பொருந்த மூடி
யுமையவளை யச்சுறுத்து மொளிகொண்மேனித்
திருத்துருத்தி திருப்பழனந் திருநெய்த் தானந்
திருவையா றிடங்கொண்ட செல்வ ரிந்நாள்
அரிப்பெருத்த வெள்ளேற்றை யடர வேறி
யப்பனா ரிப்பருவ மாரூ ராரே.
திருவாரூர் - திருத்தாண்டகம்—11.

"எடுத்து+சிவந்த" என்பது சந்தியில் எடுத்துச் சிவந்த என வல்லொற்று மிகுந்த காலை 'எடுத்து' என்பதின் ஈற்றுக் குற்றியலுகரம் தன் அரை மாத்திரையில் குறுகும் - அவ்வாறு மிகாதவிடத்து, அக்குற்றுகரம் தன் அரைமாத்திரையிற் குறைவதில்லை. இதைத் தொல்காப்பியனார்,

"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை யியற்கை நிலையலு முரித்தே"
(தொல் - குற்றியலுகரப் புணரியல் 4)

என்பார்

உ - ம் "ஏத்து பாடல்" சம்பந்தர்.

* கூற்றுத் தண்டத்தை யஞ்சிக் குறிக்கொண்மி
னூற்றுத் தண்டத் தடிக்கு மரனடி
நீற்றுத் தண்டத்த ராய்நினை வார்க்கெலா
மூற்றுத் தண்டொப்பர் போலொற்றி யூரரே
திருவொற்றியூர் - திருக்குறுந்தொகை 3.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும். ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

தேவகி

[211-வது பக்கத் தொடர்ச்சி]

அத்தியாயம் 7

தொன்மையிற்றுலங்கும்இம் மாளிகையுடைத் தலைவன் பெயர் ஜயரங்கபூபதி யென்றும், அன்று மாலை பரிமாவொன் றுகைத்துவந்து என்னைக் கவர்ந்து சென்ற காளையும் இந்த ஜயரங்கபூபதியே யென்றும் அறிந்த நான் பெற்ற களிப்பொடு வியப்பும் பூசலிட அவ்விரவை மெல்லக் கழித்தேன். பொழுது விடிந்தது. நானும் புதுப்பிறவி பெற்றவள்போன்றவொரு வுணர்வினோ டெழுந்தேன். வாரமும் ஒன்றானது. எனினும் இவ்வில்லுடைத் தலைவன் என் கண்ணிற் படவில்லை. அன்றன்று அன்னையாரிடமிருந்து அண்ணலாரின் தேகநிலையை அறிந்துவந்தேன். அவரும் நாளுக்கு நாள் குணமடைந்து வரலானார். பூபதியார் உடல்நல மின்மையை அறிந்த நண்பர் பலர் அவரைக் காண வருவதும் போவதுமா யிருந்தனர். எனவே மாளிகையில் மனித நடமாட்டம் அதிகமா யிருந்தது. வாரம் இரண்டானதும் ஜமீன்தாரும் தமது நண்பர்களுடன் அடிக்கடி வேட்டைக்குப் போய்வரத் துவக்கினர்.

இந்நிலையில் ஒருநாள் அன்னையார் என்னறை வந்து, "தேவகி, நான் அவசரமான வோர் வேலைபற்றி அயலூர் போகவேண்டியிருக்கின்றது. பத்து அல்லது பதினைந்து தினங்களில் திரும்ப எண்ணியுள்ளேன். இராணியும் என்னுடன் வருகின்றாள். நான் வரும்வரையில், இம்மனையை உனது மனைபோல் நினைத்து இங்கு இனிதிருப்பாய்" என்று அருமையுடன் கூறி விடைபெற்றுச்சென்றார். அன்னையாரும் என்னருமை இராணியும் செல்வதால் என்னைச் சூழும் தனிமைக்கு நான் அஞ்சினேன். அன்னையாரும் இராணியும் என்னைத் தனிமையில் ஆழ்த்தி விட்டுச் சென்றனர்.

அம்மையார் சென்ற பின்னர், மாளிகைபோந்திருந்த விருந்தினர் தொகையும் அருகிற்று. சில தினங்களில் எல்லோரும் சென்றனர். மாளிகையும் பழைய தனிமையில் மீண்டும் திகழ்ந்தது. பின்னர் இரண்டு மூன்றுமுறை ஜயரங்க பூபதியார் தோட்டத்தில் உலவுவதை நான் கண்டேன். ஆனால் அவர் என்னையறியாதவர்போல் இருந்துவிட்டார். அவரது இச்செயல் எனக்குப் புதுமையாகவே தோன்றிற்று. எனினும் நான் அவர்மாட்டு வைத்திருந்த மதிப்பு ஒரு சிறிதும் குறையாமல் அது வளர்பிறை மதியம்போல் வளரவே செய்தது. எனது நிலையை நோக்குங்கால், எனக்கும் அவருக்கும் இருந்த தூரம் கடலினும் அகன்றதாகும். எட்டாத ஒரு நிலையிலுள்ள அப் பெருமகன்பால் என் மனம் ஏன் பற்றுக்கொண்டுளதோ அறியேன். என் மனவரங்கில் இடம்கொண்ட அவர் நினைவை அகற்றிவிட நான் செய்த முயற்சியெல்லாம் வீணாயானது. அன்னையார் அயலூர் சென்று நாளும் பத்தாயின. பொழுதோ போவதில்லை. இராணியுடன் அம்மையார் திரும்பும்நாளையே நினைத்தவளாய் நாட்களை ஒட்டிவந்தேன். இடையிடையே என் மாமன்மனையினில் நான் பட்ட பாடெல்லாம் என்மனம் பற்றச் சோருவேன். தையம்மாள் அன்பை நினைத்து உருகுவேன். என் தோழியரை என்று காண்பனோவென்று ஏங்குவேன். என் சிற்றப்பன் நினைவும் என்னைப் பற்றி வருத்தும். இன்னவாறு நான் நாளகற்றி வருகையில் ஒருநாள், இம்மாளிகை ஏவலாளர்களில் ஒருவன் என்னறை வந்து, "அம்மா, இன்று பிற்பகல் எம் தலைவர் உங்களைத் தம்மறைக்கு வருமாறு பணித்தார்" என்று சொல்லினன். இவ்வுரை என்னைத் தளிர்க்கச் செய்தது. பண்டை நினைவெல்லாம் வெய்யோன்முன் பனியென அகன்றன. பிற்பகலை நாடியவளா யிருந்தேன்.

பிற்பகல் வந்தெய்தியதும் அவர் இருக்குமிடம் நாடி என் மனமோ விரைந்தது. எனினும் என் கால்களோ மெல்லவே என்னை அவரறைக்கண் கொணர்ந்து சேர்த்தன. இம்முறை வள்ளலார் அருள்நிறைந்த முகத்துடன் என்னை வரவேற்றார். அவர் பணித்தபடி இருக்கையொன்றில் அமர்ந்துகொண்டேன். பின் அவர் மேல் ஒன்றும் மொழியாமல் அவரது இயற்கையான மௌனத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் நாட்டமோ வெறுமையில் திரிந்தது. எம்மிடைப் பயின்ற மௌனத்தின் கொடுமையை என்னாற் சகிக்க இயலவில்லை. என் செய்வேன். மனமார மௌனத்தைச் சபித்தேன். என்ன பயன்? ஐந்தவித்தார் ஆற்றலோ எனக்கில்லை. இருக்குமேல் இம்மண்ணினும் விண்ணினும் இம் மௌனத்திற்கு இடமேயில்லாமற் போயிருக்கும். இன்னபடி மௌனத்தைச் சபித்தொழிக்குந் தொழிலில் என் மனமும் வாயும் பொருந்தியிருக்க, என் கண்களோ, அவர் திருநலத்தைக் களவாடித் துய்க்குமொரு கருமத்தில் ஆழ்ந்திருந்தன. என் கண்களாடும் களவினைக் கண்டுகொண்ட என் ஐயன், பெருமூச்சொன் றெறிந்தனராய் என் பக்கல் நோக்கினர். நோக்கியவர், வந்த முறுவலை விரைந்தகற்றி, "பெண்ணே, சாமுத்ரிகாலக்ஷண சாத்திரம் பயின்றுளாயோ? எனது மையார் மேனியும், அம்மை வடிவும் அச்சாத்திரத்திற்கு அயலானவைகளாக வேண்டுமென்றோ? இந்நாள்வரை அப்படித்தான் நினைத்திருந்தேன்" என்று கூறினர்.

மௌனம் அகன்றதற்கு மிகமகிழ்ந்தேன் எனினும், அவருரைக்குப் பதில் மொழியத் தெரியாமல், கால் தரைகிற, என் நாட்டமோ அக்கால்களைக் கருதச் சும்மாவிருந்தேன். எனினும், என் நாவோ, என்னையறியாமல் 'இல்லை' என்றவொரு சொல்லைப் போக்கி விட்டது.

"இல்லையா. என்ன இல்லை. இது பொருளுடைய விடையன்று. போதிக்கும் தொழிலுடையார் மரபுமன்று. பிரம்பினிற்கு அஞ்சிய பள்ளிப்பிள்ளைகள் வாய்குழறும் சொல்லே இது" என்று நகைத்துக் கூறினர்.

"ஐய, சாமுத்ரிகா லக்ஷண நூல் நான் கற்றதில்லை என்றேன்," என்று நான் மெல்லிய குரலில் பதில் மொழிந்தேன்.

"எனின் நங்காய், உன்னிரு கயல்கள் என்பால் தேடியதுதான் யாதோ? சொல்வாய்."

"ஒன்றுமில்லை. வைப்பும், வாயின் மனையும் பெற்றிலாதார் தேடுதற்கென்னுளது. உடைமையின் உறவினில் முளைப்பதாமொரு தேடற்பழக்கம் எளியள் எனக்கு எங்ஙனம் வாய்த்தல் கூடும். ஏழை நான் தேடும் பழக்கமில்லாதவள். எனவே நான் தேடுதற்கும் ஒன்றுமில்லை."

"நன்று. பின், உடைமையின் உறவுடைய நான்தான் உன் கண்களைக் கவர்ந்தேன்போலும். இச்சிறு தொழில் செய்த வென்னைப் பெண்ணே மன்னிப்பாய். ஈதிருக்கட்டும், எழில் எனும் அது என்பால் ஏதேனும் உளதோ பெண்ணே." என்றனர். நான் மௌனமாயிருந்தேன். பின்னரும் அவர்,

"ஏனடி பெண்ணே, மௌனம் சாதிக்கின்றாய். தேடுவதன் தத்துவத்தை எடுத்துரைத்த நீ எழிலின் இலக்கணமும் சிறிது வகுப்பாய். மேனியின் கருமையும் கவலையால் அழிந்த ஒளியும் அம்மைவடுவும் அழகின் அங்கங்களோ, கூறுவாய்." என்றார்.

"தத்துவம் ஓதவும் இலக்கணம் வகுக்கவும் நான் கற்றதில்லை. ஒருவரது மனத்திற்கு நிறைவைத்தருகின்ற ஒன்றே ஒருவருக்கு அழகுடையது. சாமுத்திரகாலக்ஷண நூல் வகுக்கும் விதிகளும், அழகினை அளப்பதற்குரிய முடிவான சாதனங்களாகா?"

"பெண்ணே, உன் சொல்வளங்கண்டு வியக்கின்றேன். நன்று, நானுனக்கு நிறைவைத் தருகின்றேனோ?"

"பொதுமையில் பேசுங்கால் என்னை இப்படி முன்னிலைப்படுத்திக் கேட்பது, நேர்மையன்றென நினைக்கின்றேன். ஐயா, நான் போய் வருகின்றேன். விடையருள்வீர்" என்று நான் நாணமொடு உரைக்க,

"பெண்ணே, பின் நாணலாம். அது போகட்டும். உனக்கு நான் கடப்பாடுடையவனா யிருந்தும், இதுவரை உன்னை நான் மறந்ததற்கு மன்னிப்பாய்"

"மன்னிப்பதற்குரிய பிழை எது என்று நான் அறியும்பொழுது பணித்தபடி செய்யத் தவறமாட்டேன். சேவகம் புரிவாரையெல்லாம் நினைத்துக்கொண்டிருப்பது இயல்வதொன்றன்று."

"அடி சேவகப் பெண்ணே, உன்னைப்பற்றிய விவரம் அறிய விரும்புகின்றேன்."

பூர்வசரித்திர மொன்றுமில்லாத என்னைப்பற்றியறியவிரும்புவது விருப்பத்தளவோடு நிற்கவேண்டுவதேயன்றிப் பயனொன்றும்பெறவியலாதென்றே நினைக்கின்றேன். எனவே பேசுவது எதைப்பற்றி யென்று தெரியவில்லை."

"எதைப்பற்றியும் பேசலாம். பேசுவாய், இம் மௌனம் வேண்டா. மோனத்துறைபடிந்து ஞானியாவதற்குக் காலமுமுண்டு"

"ஐய, என்னை என்னசெய்யச் சொல்கின்றீர்"

"பெண்ணே, நின் பவளத்திருவாய் மலர்ந்தருளச் சொல்கின்றேன்"

"எதுபற்றி யென்று கூறினால், இயலுமேல் உம் பணி தலைமேற் கொள்வேன்"

"உனக் கிஷ்டமானதைப்பற்றிப் பேசு"

"அத்திறம் நான் பெற்றதில்லை. தொகுதி தொகுதியாக உரிமைக்கு ஊக்கமோடுழைக்கும் ஜன நலத் தொண்டர் உறவு நான் பெற்றதில்லை. எது பற்றியும் எதையும் பற்றாதபடி சொற்றொடர் பெருக்கச் சேகரனார் அனைய பெருமக்கள் பலர் குடந்தையில் இருக்கின்றனர். பெண்ணுரிமை பேணவந்த என் மாமியின் மனையில் இருந்துளேன்; ஆனாலும், நான் அப்பயிற்சி கைவரப்பெறவில்லை, என் செய்வேன். நும் விருப்பம் நிறைவேறுமாறுசெய்ய என்னால்இயலாமைக்கு வருந்துகின்றேன்."

"நல்லாய், பேச்சையே விரும்பாத நான், பண்ணையேவென்றுவிட்ட நின் வாய்மொழிக்கு இன்று அவாவுகின்றேன். குழம்பும் என் மனம் அமைதியும் உற்றது. அணங்கனையாய், என் மனங்குளிர நின் வாய் திறந்து இசை ஒன்றிரண்டு பாடுவாய்" என்று, என் கொற்றவன் கூறியருளினர். அவருரை என்பால் எய்துவித்த மகிழ்ச்சி எல்லையற்றது. என்னுள்ளத்தில் கடலெனப் பெருகலான அம்மகிழ்ச்சியில் மிதக்கும் நான் என்னையும் மறந்துவிட்டேன். என்னைப் பற்றியிருந்த மண்தளையும் இன்று அறுந்தது. என் உள்ளம் விண்ணின் பெருவெளியில் பெருக என்னையும் அறியாது உலகெலாம் உண்டும் உமிழ்ந்தும் அளந்தும் காத்தாளும் பெருமான் திருத்தாளை ஆன்றோர் அருளிய பாக்களால் பரவலானேன்.

வேதங்க ளறைகின்ற வுலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்க ளிவையென்னிற் படிவங்க ளெப்படியோ
வோதங்கொள்கடலன்றி யொன்றினோடொன்றொவ்வாப்
பூதங்களொடு முறைந்தா லவையுன்னைப்பொறுக்குமோ.

கடுத்தகராங் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை யனைத்தினுஞ்சென் றொலிகொள்ள வுறு
[துயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பாமே பரமேயென்
றெடுத்தொரு வாரணமழைப்பநீயோவன்றேனென்றாய்.

புறங்காண வகங்காணப் பொதுமுகத்தி னருளோக்க
மிறங்காத தாமரைக்கணெம்பெருமா அனியம்புதியா
லறங்காத்தற்குன்க்கொருவராருமொருதுணையின்
கறங்காகுமெனத்திரிய நீயேயோ கடவாய்தான். [றிக்

துறப்பதே தொழிலாகத் தோன்றினோர் தோன்றியக்கால்
மறப்பரோ தம்மையது வன்றாகின் மற்றவர்போற்
பிறப்பரோ வெவர்க்குந்தாம் பெற்றபதம் பெறலரிதோ
இறப்பதே பிறப்பதே யெனும்விளையாட் டினிதுகந்தோய்

பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் றகைமூர்த்தி நீயாகின்
இனிநின்றமுதற்றேவரென்கொண்டென்செய்வாரே

ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றொழிந்த மன்னுயிர்க்கு
நீயாகின் முதற்றாதை நெறிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் றனிமூர்த்தி

நீயாதி பரம்பரமு நின்னவே யுலகங்கள்
ஆயாத சமயமு நின்னடியவே யயலில்லை
தீயாரி னொளித்தியால் வெளிநின்றாற் றீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ.

தாய்தன்னை யறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயுமறியு முலகின் றாபாகி னைய
நீயறிதி யெப்பொருளு மவையுன்னை நிலையறியா
மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய்.

பன்னலா மென்றுலகம் பலபலவு நினையுமால் [ன்றே
உன்னலாற் பெருந்தெய்வ முயர்ந்துளோ ரொழுக்க
அன்னவூர்தியை முதலாமந்தணர்மாட் டருந்தெய்வ
நின்னலா லில்லாமை நெறிநின்றார் நினையாரோ.

பொருவரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர் [வார்
இருவினையு முடையார்போ லருந்தவநின் றியற்று

திருவுறையு மணிமார்ப நினக்கென்னை செயற்பால
வொருவினையுமில்லார்போ லுறங்குதியா லுறங்காதாய்

அறவாகிச் சுமத்தியா லயிலெயிற்றி னேந்தியால்
ஒருவாயின் விழுங்குதியா லோரடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை யிஃதறிந்தாற் சீறுளோ
மருவாருந் துழாயலங்கன் மணிமார்பின் வைகுவாள்

மெய்யைத்தான்சிறிதுணர்ந்து நீவிதித்தமன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ வுனக்கென்ன குறையுண்டோ
வையத்தார் வானத்தார் மழுவாளிக் கன்றளித்த
வையத்தாற் சிறிதையந் தவிர்ந்தாரு முளரையா.

அன்னமா யருமறைகள ளறைந்தாய் நீ யவையுன்னை
முன்னமா ரோதுவித்தா ரெல்லாரு முடிந்தாரோ
பின்னமா யொன்றுதல் பிரிந்தேயோ பிரியாதோ
வென்னமா மாயையிவை யேனமாய் மண்ணிடந்தாய்

ஒப்பிறையும் பெறலரியவொருவாமுன் னுவந்துறையு
மப்புறையு டிறந்தடியேனருந்தவத்தா லணுகுறலால்
இப்பிறவிக்கடல்கடந்தே னினிப்பிறவே னிருவினையும்
துப்புறழு நீர்த்தசுடர்த் திருவடியாற் றுடைத்தாய் நீ.

இப்பாக்களை நான் பாடிக்கொண்டிருக்கையில் பூபதியாரின் அன்பினிற்குரிய நாய் அவ்விடம் வந்து என்மேற் றுவ, இழுந்த என்னிலே கைவரப்பெற்று எழுந்தேன். ஐயரங்கன் வியப்பொடு என்னை நோக்கிய வண்ணமிருந்தார். நாணமீதூர அப்பெருமகன் விடையும்பெறுது அவ்விடம் பெயர்ந்தகன்றேன்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

4-ம் பத்து, 8-ம் தசகம்.

[209-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்.

தளிர்நிறத்தால் குறைவில்லாத்
தனிச்சிறையில் விளம்புற்ற
கிளிமொழியாள் காரணமாக்
கிளரரக்க னகரெரித்த
களிமலர்த்து ழாயலங்கற்
கமழ்முடியன் கடல்ஞாலந்
தளிமிக்கான் கவராத
அறிவினுற் குறைவிலமே.

பதக்குறிப்புக்கள்:—விளம்புற்ற - அநுமான் சொல்லக் கேட்டு, தனிச்சிறையில் - அசோகமரத்தின் கீழ் ராக்ஷஸிகளின் காவலில் அகப்பட்ட, கிளிமொழியாள்-ஸீதை, (இவள் தளிர்நிறத்தால் உத்கிருஷ்டமானவள் - கிளிபோல் இன்பவாக்கு மொழிபவள்) காரணமாக - சிறைமீட்க, கிளர் அரக்கன் நகர் எரித்த - பெரியதோர் வன்மையுடைய இராவணனுடைய நகரை அவன் புத்திராதிகளுடனும் பந்து ஸைந்நியங்களுடனும் நாசப்படுத்திய, களிமலர்த்துழாய் மாலைகளாலே கிரீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ இராமபிரான். கடல்ஞாலத்து அளிமிக்கான் - ஸர்வ லோகங்களையும் தன் (அளி) கிருபையால் அயோத்தியில் சிங்காதனமேறி ஆட்சிபுரிந்தவன் கவராத அறிவினுல் குறைவிலம்.

6-ம் பாசுரம்.

அறிவினுற் குறைவில்லா
வகல்ஞாலத் தவரறிய
நெறியெல்லா மெடுத்துரைத்த
நிறைஞானத் தொருமூர்த்தி
குறியமா ணுருவாகிக்
கொடுங்கோளா னிலங்கொண்ட
கிறியம்மான் கவராத
கிளரொளியாற் குறைவிலமே.

பொழிப்புரை:-பகவத் விஷயத்தை யறிந்துகொள்ள வேண்டுமென்கின்ற ஆசைகூட இல்லாத (அதாவது மோக்ஷோபாயத்தைத் தாம் அறிந்துதெளிந்துகொள்ளவில்லையென்ற குறை தமக்கிருக்கிறதென்றும் அறியாத) பாமர ஜனங்களாய் உலக இயற்கையிலிருப்பவர்களுக்கு, அவரவர் ருசி சக்தி இவைகளுக்கேற்பப் பல கர்மயோக ஞானயோக பக்தியோக விபாகங்களை எடுத்துக்கீதையில்விவரமாய்க்கூறியிருப்பினும் ஞானமூர்த்தியான ஸ்ரீ கிருஷ்ணபகவான் இதுவும் போதாதென்று,திருவிக்கரமா அவதாரத்தின் சிறிது நியாயம் பிறழ்ந்தவழியாயினும்வாமனனுகயாசித்து உலகத்தை மூன்றடியால் அளக்கும்போது, "உலகத்தீரே காண்மின்! இந்தத் திருவடிதான் உங்களுக்கு உய்புமாறு" என்று, அறிந்தவர் அறிவில்லாதவர் முதலிய எல்லா ஜனங்களும் ஒருங்கே பிழைக்கும்படி தன் கருணையால் எல்லாருக்குங் காட்டித்தந்த மஹாபிரபு கவராத கிளரொளியால் குறைவிலம் என்கிருள்.

குறிப்பு :—இக் கட்டுரையில் உபோத்காதத்தில், இவ்வாழ்வார் அவதார விசேஷங்களை எடுத்து காட்டுவதிலும், உதாரணங்களிலும், தாம் உபயோகிக்கும் அடைமொழிகளிலும் ஓர் முக்கிய கருத்தை அமைத்தே பாடுகின்றுரென்று யாம் வரைந்துள்ளோம். இங்கு வாமன அவதாரத்தை எடுத்ததன் நோக்கமின்னதென்று ஆறுயிரப்படிகாரரின் உரையின் உதவியாலெழுதலானேம்.

கொடும் - கடுமையான, கோள் - ஸ்வீகரிக்கை - கைநீட்டித் தானம்வாங்கிக்கொளல். பலிசக்கரவர்த்தியின் சிரஸும், பழங்கள் அதிகம் முதிர்ந்தால் கெட்டுப்போவதுபோல், உன்னத நிலையிலுள்ள மனிதரும், காலம் இறுமாப்பு முதலியவற்றுல் அடிதொட்டுக் கெட்டுப்போகாதபடி அவர்களைக் காப்பாற்றுதல் நிமித்தம் பகவான் பலிச்சக்கரவர்த்தியைக் 'கொடுங்கோள்' வாங்கியாகிலும் காப்பாற்றினுரென்பது திருவுள்ளம்.

குறைவிலம் - "கிளரொளி" வெளியே வீசிப் பிரகாசிக்கும் காந்தி. என் மேனியின் ஒளி இருப்பதினுலே எனக்கு வருவதோர் பிரயோஜனமு மில்லை; அது போனதினுலே ஓர் குறைவும் நேர்வதுமில்லை—

இனி எல்லாப் பாட்டுகளிலும் "குறைவிலம்" என்பதற்கு இப்படியே பொருள்கொள்க. இப்பாசுரங்களின் ரஸத்தை உட்கொண்டோ மற்றொரு வகையாலோ நம் பெண்மணிகள் உலக வழக்கில் "அவரில்லா உடம்புக்குப் பூவென்ன, சாந்தென்ன. அணிகலன்களென்ன" வென்று வெறுப்பினுல் கூறுவது ஞாபகத்துக்கு வாத்தக்கது.

7-ம் பாசுரம்.

கிளரொளியால் குறைவில்லா
அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து
கிளரொளிய விரணியன
தகன்மார்பங் கிழித்துகந்த
வளரொளிய கனலாழி
வலம்புரியன் மணிநீல
வளரொளியான் கவராத
வரிவளையாற் குறைவிலமே.

உரை:—கிளர் - பொலிகின்ற,ஒளியால் குறைவில்லா - தேஜஸினுலே குறைவில்லாத, அரிஉருவாய்- நரசிங்க அவதாரமாய், கிளர்ந்து - வெளியில் தோன்றி, எழுந்து - பிரகாசித்து, கிளரொளிய-வெகு பராக்கிரமசாலியாயிருந்த, இரணியனது அகல்மார்பை - ஹிரணியன் என்ற ராக்ஷஸனுடைய அகலமான மார்பை, கிழித்து - தம் நஹங்களாலே பிளந்து, உகந்த - தன் ஆச்ரிதனை பிரஹலாதன் தகப்பனிடத்தில் பட்ட துயரங்களெல்லாந் தீர்ந்ததென்று சந்தோஷப்பட்ட, மணி நீல வளர்ஒளியான் - ராக்கதன் மறித்ததும் கோபம்தணிந்து குளிர்ச்சியுடைய சுமுகனுய் நீலமணிபோல் பிரகாசிக்கும் பகவான், வளர் ஒளிய - மழுங்காத தேஜஸையுடைய, வலம்புரி - சங்கமென்ன, கனல் ஆழி - நெருப்புப்போல் ஜ்வலிக்கின்ற சக்கரமென்ன, (பகவானின் கை நகங்களே இரணியனைக் கிழித்துத் தொலைத்துவிட்டபடியால் தனக்கு இவ்வகையில் செய்யத்தகுங்கருமம் ஒன்றுமில்லையே என்ற மனஸ்தாபத்தால் கோபம் தணியாமல் நெருப்புப்போல் சக்கராயுதம் ரோஷத்தோடு இருப்பதாகத் திருவுள்ளம் பற்றிக் கனல் ஆழி என்கிருர்) இவைகளைத் தரித்திருக்கும் ஸ்வாமி, கவராதவரிவளையால் - கவராத வரிகளையுடைய வளைகளால்; குறைவிலம்.

வாலி வதை

[213-வது பக்கத் தொடர்ச்சி]

இருவர்களுக்கும் நேர்ந்த பூர்வபக்ஷ சித்தாந்தத்திலிருந்து வாலி செய்த ஒவ்வொரு குற்றமும் தர்ம சாஸ்திர வழக்கின்படி அவனுக்கு மரண தண்டனை விதிப்பதற்கேற்ற கொடுமையுடன் கூடினது என்று ஏற்படுகின்றது. இதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனுல் மறைந்துநின்று நிராயுதன் மார்பில் பாணம்போட்டுக் கொன்றதற்கு என்ன சமாதானம் என்று கேட்கின்றனர்.

ராமனுக்கும் வாலிக்கும் நேர்ந்தது யுத்தம் என்று கொள்ளல்ஒருவிதத்திலும்பொருத்தமுடையதன்று. தருமவழிநின்றும் தவறி மகா பாபங்களைச் செய்த குற்றவாளிகளின் கோஷ்டியில் சேர்ந்து நிற்கிறுன் வாலி. இவன் தர்மசாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவ னுதலாலே இவன் செய்த குற்றங்கள் மிகவும் கிரௌர்யமும் கொடுமையும் வாய்ந்தவை என்று சொல்லத் தட்டில்லை. aggravated form of the offences ஆக ஏற்படுகின்றன. அக்காலத்திய சட்டதிட்டங்களுக்கு விரோதமாய்த் தரும சாஸ்திரங்களினின்றும் தவறிப் பிரபலமான குற்றங்கள் செய்து நின்றனனை வாலியை "outlaw" என்றே கருதல்வேண்டும். அவனை அவ்விதமே கருதி மரணதண்டனையை விதித்தனன் உலகுக்குச் சக்ரவர்த்தியாய்ப் பிறந்தானெரு மூர்த்தி. அத்தண்டனையை விதித்து அதைத் தானே நின்று கொலைக்களத்திலே நிறைவேற்றினுன்.

சகோதரர்களுக்குள் போர்க்களமாய்ப் பிறந்தது வாலிக்குக் கொலைக்களமாய் முடிந்தது.

"நஞ்ச மன்ன வரைநலிந் தாலது
வஞ்ச மில்லை மனுவழக் காதலான்"

This was a case of hunting down an outlaw and putting him to death. வாலியின் குற்றம் மரணதண்டனைக் குரியதென்றுல், அத்தண்டனையை அவன்பால் நிறைவேற்றிய பாகம் குற்றம் என்று கூறல் ஒரு விதத்திலும் பொருத்தமாகாது. மரணதண்டனை விதிக்கப்பெற்றோர் வெவ்வேறு விதமாக அத்தண்டனையை அடைகின்றுர்கள். தூக்கிற் போடுவது, மின்சாரத்தின் வலிமையாற் கொல்வது, gillotine மூலம் மரணமடைவிப்பது முதலியன. நேருமன்று மறைந்து நிராயுதன் மார்பில் பாணம் போட்டது மரணதண்டனையை நிறைவேற்றிய அம்சசமேயன்றி வேறன்று. தான் செய்த குற்றத்திற்கு மரணதண்டனையே உரியதென்றும், அதை மறைந்து நின்று நிறைவேற்றிய பாகம் ஒரு சிறிய அம்சம் (detail) என்றும், அக்காரணம்பற்றி அதுவும் தன்னுல் மறுபடியும் ஆக்ஷேபித்துப் பிரச்னம் செய்வதற்கு உரியதன்று என்றும் நினைத்து அவ்வழியில் வாலி இறங்கினுனல்லன் என்ற கருத்தோடு அவனுக்கு அந்தச் சமயம் அடைமொழி கொடுக்கவந்த கவியும் "சிறியன சிந்தியாதான்" என்று சமர்த்திக்கின்றுர்.

ஆனுல் இந்தக் கட்டத்தில் வாலியின் கேள்வியாக "அவ்வுரை யமையக் கேட்ட" என்ற பாடலும், "முன்பு நின்றம்பி வந்து சரண்புக" என்ற இளைய பெருமாள் உத்திரமாக ஒரு பாடலும் தோன்றுகின்றனவே என்று சந்தேகம் ஜனிக்கலாம். இக்கவிகள் கம்பரது அல்ல என்றும்,அம் மகாகவியின் உட்கருத்துத் தெரியாதவொருவர் இடைச்செருகலாய் ஏற்படுத்தினவை என்றும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்வதற்கேற்ற சான்றுகள் இவ்விடமே கிடக்கின்றன.

ஸ்ரீராகவன் சமாதானம்கூறிச் சமர்த்தித்த பாசுரம் "மனையின் மாட்சியென்றுன் மனுநீதியான்" என்று முடிந்து நிற்கிறது. இதற்கு அடுத்து நான் "இடைச்செருகல்" என்று நினைக்கின்ற பாடல்கள் இரண்டும் கிடக்கின்றன. அடுத்த பாசுரமும் "கவிகுலத்தரசு மன்னன் கட்டுரை மனத்துட் கொண்டான்" என்று துடங்குகிறது.இவ்விடத்தில்கண்ட "மன்னன்" என்பதும் "மனுநீதியான்" என்றசொல்லில் குறிப்பிட்ட ஸ்ரீ ராகவனையே குறிக்கும். இதைவிட்டு "அவ்வுரையமையக்கேட்ட" என்ற பாடலையும் "முன்பு நின்றம்பி வந்து சரண்புக" என்ற பாடலையும் கம்பரால் வரையப்பட்ட

னவா வைத்துக்கொண்டால் "மன்னன்" என்பதற்கு "அவ்வுரையமையக்கேட்ட" என்ற பாடலிற் கண்ட "இலக்குவன்" என்று வலியப் பொருள்கொள்ள வேண்டிவருகிறது. கம்பர் ஒரு இடத்திலும் இளைய பெருமாளை "மன்னன்" என்று அழைத்திலர். இந்த ஒரு ஆக்ஷேபணை மட்டுமே இப்பாசுரங்கள் இடைச்செருகல் என்றுகொள்ளப் போதுமானதென்னலாம். ஆயினும் இப்பாடல்களைச் சற்று நின்று ஆராய்ச்சி செய்தோமாகில் இவைகளைக் கல்வியிற் பெரியார் ஒரு காலத்திலும் வரைந்திரார் என்று திட்டமாய்க்கொள்ளலாம். இப்பாடல்களாற் போந்தபொருள் பின்வருமாறு. பெருமாள் வார்த்தைகளைக்கேட்ட வாலியும், "செவ்வியோய் நீ கூறிய ககூகிகள் ஒருபக்கமிருக்கட்டும். யுத்தகளத்தில் நேர்நின்று எய்யாது வேடர்களுக்கொப்ப மறைந்து என்பேரில் பாணப்பிரயோகம் செய்தது எவ்வாறு" என்று கேட்டனனாக, இளையபெருமாளும் "முன் உன் தம்பி வந்து சரணம் புகவும் உன்னை யமலோகத்திற்கு அனுப்புவதாக நேர்ந்தனன் ராமன். யுத்தத்தில் நீயும் உயிரின் பேரில் அன்பு பூண்டு பெருமாளிடம் அடைக்கலம் புகுந்தால் என்செய்வது என்று எண்ணி அண்ணனும் மறைந்து நின்று எய்தான்" என்று முடித்தான்.

இப்பாசுரங்களினால் இரண்டு பிரபல தோஷங்கள் ஏற்படுகின்றன என்பது இவற்றை உய்த்துணர்வோர் தெளிந்துகொள்ளல் இயல்பே. ஒன்று பொதுவாக மகாவீரர்களது மனப்பாங்கைக் கவனியாது நிற்றல். இரண்டு, பெருமாள் கைக்கொண்ட சரணாகதி தர்மத்தின் சூக்ஷ்மத்தை ஆராயாது நிற்றல். ராமாயணத்தில் தோன்றி நிற்கும் வீரர்கள் வானரராயினும் சரி; அரக்கராயினும் சரி, யுத்தம் நேர்ந்துழி உயிரின்பேரில் ஆசைகொண்டு சத்துருவினிடம் சரணம்புகும் மனப்பாங்குடையரல்லர். இது இவர்கள் வீரத் தன்மைக்கு இழிவாம் என்பது வெளிப்படை. பிராட்டியை ஸ்ரீராகவன் திருவடிகளில் சமர்ப்பித்து, அவனைச் சரணம்புக்கு அபராத க்ஷாபணம் செய்துகொள்ளுமாறு ஹிதம்சொன்ன ஸ்வஜனங்களின் வார்த்தைகளை அங்கீகரியாது,

நாசம்வந் துற்ற போதும் நல்லதோர் பகையைப்
பெற்றேன்"

என்றும்,

"மொக்குளின்ன ஆக்கையை விடுவதல்லால் [டாய்
சீதையை விடுவதுண்டோ இருபது திண்டோளுண்

என்றும்,

பொன்றுதல் எக்காலத்தும் தவிருமோ பொது
மைத்தன்றோ
இன்றுளார் நாளைமாள்வர் புகழுக்குமிறுதியுண்டோ"

என்றும் ராவணன் வாயிலும், விபீஷணாழ்வானை யிட்டும், பெருமாள் நேரில் கண்டவிடத்தும் தன்னைச் சரணமடையும்படி கோரிய சமயத்திலும் கும்பகர்ணன் வாயில்,

"கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையுமாடல்,
கொண்டேன்"

என்றும்

"புலையுறு மரணமெய்தல் எனக்கது புகழேயால்"

என்றும், "சேவகர் கடனேராமல்" "தக்கது புகன்றிலை போலும்" என்றும் வீர வசனங்களையும் போட்டுச்சொன்ன கம்பநாடர் ராவணனை அலக்ஷியமாக வாலிற் கட்டிப்போந்து வாகைசூடிய மகாவீரனும் வாலி நச்வரமான சரீரத்தில் அன்பு பூண்டு சரணம் புகத் துணிவான் என்று இளையபெருமாள் சங்கிக்கவும் இடங்கொடார். தன் நாடகத்தில் தோன்றும் நாடகபாத்திரங்களில் மகா வீரர்களாயமைந்தவரை, உயரியஉத்தம வீரலக்ஷணங்களுடன் அமைத்துக்காட்டும் கவிச்சக்கிரவர்த்தியார் இவ்விதம் எழுதினர் என்பது ஒருவிதத்திலும் பொருந்தாது.

இது நிற்க. இரண்டாவது சொன்ன தோஷத்தைச் சற்றுக் கவனிப்போம். ஸ்ரீமத் ராமாயணம் சரணாகதி சாஸ்திரமென்றே அழைக்கப்பெறுகின்றது. அந்நூல் கற்பிக்கும் பாரமார்த்திக விஷயங்களில் இது முதன்மையானதென்பது பூர்வாசாரியர்கள் நிர்வாகம். சரணாகதியை ஒரு வியாஜமாகக் கொண்டு தன்னை விபீஷணாழ்வான் சுக்ரீவாதிகள் துணிந்தபடி, கொல்லும்படி நேர்ந்தாலும் அதையும் அது போன்ற பின்வரும் ஏனைய சாதக பாதகங்களையும் எதிர்பாராது சரணம் புகுந்தவனை அங்கீகரிப்பதே தன் முக்கிய கோட்பாடு என்று துணிந்து அனுஷ்டித்துக் காட்டின சத்திய சங்கல்பனான பெருமாளின் கொள்கையை முற்றிலும் நிராகரித்து நிற்பதன்றோ இப்பாட்டின் பாவம்.

'வெற்றியே பெறுக தோற்க வீயவீ யாது வாழ்க
பற்றுதலன்றியுண்டோ புகலெனைப் பகர்கின்றனை"

என்றல்லவோ "தன் விரதத்தைப்' பெருமாள் போற்றி நிற்பது. பத்துமாத காலம் ஸஹதர்ம சாரிணியான ஸ்ரீஜனகராஜன் திருமகளைத் தன்னிடமிருந்து பிரித்துவைத்த மகா பாபியான ராவணன் சரணம் புகுந்தாலும் அவன் அபராதத்தைப் பொறுத்து அங்கீகரிப்பதான கருத்துடன் "யதிவா ராவணஸ்வயம்" என்றல்லவோ அவன் பாசுரம். ஏற்கெனவே ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு லங்கா இராஜ்யத்தை முடிசூட்டியும் தண்டகாரண்ணிய வாசிகளான ரிஷிகளுக்கு ராவணாதிகளைச் சம்ஹாரம் செய்வதாகப் பிரதிக்ஞை செய்தும், இவ்விதம் ஸ்ரீராகவன் ஸங்கல்பித்தான் என்பதை நாம் அறிவோம். ஸத்ய ஸங்கல்பனான ஸர்வக்ஞனுக்கு உற்றவிடத்து வேண்டும் யுக்திகள், சூழ்ச்சிகள் (resources) உதிக்காது போய்விடுமோ என்று பிரமித்தானொரு சிறியன் பாடின பாசுரம் போலக் கிடக்கிறது இவ் வெள்ளைப் பாட்டு. அதிதி சத்காரம் செய்வதாக உத்யோகித்து நிற்கும் ஒரு கிரகஸ்தன் அதிதி தோன்றினால் என் செய்வது என்று பயந்து அவன் கண்ணில் படாது வீட்டை அடைத்துத் தாளிட்டுக்கொள்வதுபோல் அன்றோ இந்தப் பாசுரத்தின் பாவம் அமைந்து கிடக்கிறது. சரணாகதி சாஸ்திர கந்தம் தெரிந்த ஒரு சாமான்யனும் இவ்விதம் எழுதத் துணியான். ஸ்ரீ வைஷ்ணவ தர்மத்தில் பரமபத நாதனை அடைவதற்குச் சுலபமான மார்க்கமாய் ஆசாரியர்களால் அறுதியிடப்பட்ட சரணாகதி சாஸ்திரத்தின் நுட்பங்களைப் பராமர்சித்துப் பசுமரத்தாணி யறைந்தாற்போன்று பாசுரமிட்ட ஸ்ரீ வைஷ்ணவஸ்ரீ படைத்த கல்வியிற் பெரியார் இவ்விதம் எழுதினர் என்று துணிதல் அவரிடம் பரம அபசார ஹேதுவாகுமென்பன்.

ஆனால் சிலர், இவ்விடத்தில் தோன்றுவது இளைய பெருமாள் பணித்ததே யன்றிப் பெருமாள் வார்த்தை யில்லையே என்கிறார்கள். இது இளைய பெருமாளுக்கு ஒரு அவத்யம் கற்பிப்பதாகும். "தலையாய பொருளுணர்விற் கலைமகட்குந் தலைவராய்" ஞானசம்பாதனம் செய்து "பஹிர்ப்பிராண இவாபர:" என்று சொல்லும்படி பெருமாளை இணைபிரியாது நின்று அவன் கைங்கரியங்களிலே மூண்டு அவன் அநுஷ்டானங்களைத் தானும் அநுஷ்டித்துப் போந்தானொரு தர்மமூர்த்தியன்றோ இளைய பெருமாளும். அவனும் "நீ சரணம் புக்கால் என் செய்வது என்று பயந்து என் த்மையன் உன்னை மறைந்து நின்று கொன்றான்" என்று கூறினான் என்பது ஒருவிதத்திலும் பொருந்தாது. சரணாகதி தர்ம அநுஷ்டானத்தில் பெருமாளுக்கு இழுக்காம் வார்த்தைகளை இளைய பெருமாள் வாக்கிலே போடக் கம்பர் ஒரு விதத்திலும் உடன்படார். தவிரவும் விபீஷணாழ்வான் ஸ்ரீ ராகவனிடம் சரணம்புக்கவிடத்தில் ஆக்ஷேபணை செய்த கோஷ்டிகளில் இளையபெருமாள் சேராது நின்றது இவ்விடத்தில் ஞாபகத்திற்கு வரலாம். சிறியதிருவடியும் இவரும் அநுகூல பக்ஷத்திலே நின்றதாகப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்வர். சரணம் புகுந்தவர்களைப் பெருமாள் கைவிடாது பக்ஷத்துடன் அங்கீகரித்துக் காப்பாற்றும் அதிசயம் சத்துருக்களாலும் போற்றக் கிடக்கிறது ராமாயணத்தில்.

"அறப்பெருந் துணைவர் தம்மை
யபயமென் றடைந்த வுன்னைத்
துறப்பது துணியார் தங்க
ளாருயிர் துறந்த போதும்"

என்று கும்பகர்ணனும் கூறிப்போந்ததைத் திருஷ்டாந்தப்படுத்தி மேற்செல்வாம். இத்யாதி காரணங்கள் கொண்டு இவ்விரு பாடல்களும் "இடைச்செருகல்" என்றே துணியவேண்டும். எனவே, தன்னை மறைந்துநின்று வதைசெய்தது மரணதண்டனையை நிறைவேற்றியதன்பாற்பட்ட ஒரு சிறிய அம்சம் என்று தெளிந்து வாலியும் அதுசம்பந்தமாய் மறுபிரச்னை செய்யாதொழிந்தனன் என்று பெறும்படியாய்ச் "சிறியன சிந்தியாதான்" என்று அவன் மனப்பாங்கைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார் ராமகதையில் திளைத்தாடிய கல்வியிற் பெரியாரும். இதைத்தான் கம்பசூத்திரம் என்பர் பெரியோர்.

இதுசம்பந்தமாய் ஸ்ரீ ராகவனிடம் குறை கூறுவோர் யாவதாயுஷ௱ம் அவன் அநுஷ்டித்துக் காட்டின தர்மங்களைத் தவிர்ந்து வாலிபால் நடந்துகொண்டான் என்று துணியவேண்டி வருகிறது. முதனாள் யுத்தத்தில் நிராயுதனாய் சமஸ்த சைன்னியங்கள், படைக்கலங்கள், துணைவர்கள் நீங்கப்பெற்றவனாய் நின்ற லங்கேசுவரனை ஓரே பாணம்போட்டுக் கொல்லத்துணியாது "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" என நல்கினவன் நிராயுதனாய் நின்ற வாலியை மறைந்து நின்று கொல்ல ஒருப்படுவானோ என்று நாம் சந்தேகிக்கவேண்டாமா? ராவணனிடம் நிகழ்ந்தது போராதலின் அதுசம்பந்தான தர்மங்கள் பெருமாளால் அநுஷ்டித்துக் காட்டப்பட்டன. அவற்றை,

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றத னெஃகு."

என்று தெய்வப்புலமை திருவள்ளுவனார் திருவாய் மலர்ந்தருளினார். வாலியினிடம் நிகழ்ந்தது போரன்று. அவன் "உறைவிடம் காண்பதே குறை" கண்டவுடன் சம்ஹரிப்பதாகச் சூளுற்ற சங்கல்பத்தை நிறைவேற்றியபடி.

பெருமாள் பக்கலிலே வாலியைக்காட்டிலும் மகா அபராதம் செய்துநின்ற ராவணனையும் குற்றவாளியின்பாற் படுத்தி மறைந்துநின்று கொல்லலாகாதோ, கடுமையான போர்புரிந்து ஏன் கொல்லவேண்டும், என்று ஒரு சந்தேகம் ஜனிக்கலாம். ஸ்ரீ இராகவனுக்குள் அடங்காத பல காரணங்களினால் ராவணனுடன் போர் ஏற்பட்டது. அவனை ராஜ்யத்தினின்றும் சதுரங்க சைன்னியங்களினின்றும் தனியாய்ப் பிரித்துக் கொல்வதற்குச் சௌகரியம் வாய்த்திலது; அவ்விதம் வாய்த்திருந்தால் பிராட்டியைக் களவிற் கொண்டுபோன ஓரேகுற்றத்திற்கு அவனையும் வாலியைப்போலவே outlaw வாக வைத்துப் பெருமாளும் கொன்றிருக்கக்கூடும். இதுவே அதற்கு உத்தரம் என்க.

—o—

காற்று மழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[196-வது பக்கத் தொடர்ச்சி]

ஏரியல்:—துறைமுகத் தகவயின் தீதின்றி யிருக்கின்றது அரசன் கப்பல்; எஞ்ஞான்றும் அலக்கணுற்றுழலும் பர்முதாவிற்குப் போய்ப் பனியினைக் கொணர என்னை நீ ஒருகால் எழுப்பியழைத்த அவ்வாழ்ந்த மூலையில் அது ஒளிக்கப் பெற்றுளது (1). மாலுமிகள் கப்பற் படிகளின்கீழ் அடுக்குண்டு கிடக்கின்றனர். வருந்திய உழைப்பினோடு மந்திரமும் கலந்துகொள்ள, அவர்தமை யான் உறங்கவிட்டிருக்கின்றேன் (2). நான் கலைத்தகற்றிய மற்ற மரக்கலங்களோ வெனின், அவை மீண்டும் சேர்ந்து தம்மூர் நேப்ல்ஸிற்குத் துயரமுடன் வழிக்கொண்டனவாய் மெடிட்டரேனிய மிதவைமீதிருக்கின்றன. வேந்தனது வங்கம் பிதிரவும்

அரசனுடைய கப்பலையும் மற்றைய கப்பல்களையும் மாலுமிகளையும் என்ன செய்தாய் என்று ப்ராஸ்ப்பீரோ கேட்டதற்கு ஏரியல் பதில் கூறுகின்றான்.

(1) பர்முதாஸ் என்பது ஓர் தீவு. அலக்கண் - துன்பம், பர்முதாஸ் என்னும் தீவு எப்பொழுதும் காற்று மழைகளுக்கு ஆளாகி வருந்தியவண்ணமா யிருக்கு மென்றும், மந்திரம் செய்வோர்களுக்கு வேண்டிய பொருள்கள் அங்குக் கிடைக்குமென்றும் கூறுவர். ப்ராஸ்ப்பீரோவிற்கு ஒரு நாள் அந்தத் தீவின் பனிநீர் வேண்டி யிருந்தது. அப்பொழுது கடலின் ஓர் ஆழ்ந்த இடுக்கில் உறங்கி யிருந்த ஏரியலை அவன் எழுப்பிப் பனிநீர் கொணருமாறு அனுப்பினான். இவ் வடையாளத்தைச் சொல்லி, அந்த மூலையில்தான் இப்பொழுது அரசனுடைய கப்பலைத் தான் ஒளித்து வைத்திருக்கின்றதென்று ஏரியல் கூறுகின்றது.

(2) கப்பலைக் காப்பதற்கு முயன்றதால் விளைந்த களைப்பினோடு என் மந்திரமும் சேர்ந்ததால் மாலுமிகள் அடுக்

ஆன்ற அவன் ஆகார மழியவும் தாம் கண்டன
ரென்னு மெண்ணமுடையா ரவர் (3).

ப்ராஸ்ப்பீரோ:—ஏரியல், உனக் கிட்டவேலை திட்டமாய்ச் செய்யப்பெற்றது; எனினும் இன்னுமுள சில கருமம். இப்பகல் பொழுதிது எத்தனை?

ஏரியல்:—உச்சிவேளை கழிந்தது.

ப்ராஸ்ப்பீரோ:—கடிகை யிரண்டேனும் (4). ஆறிற்கு மிப்பொழுதிற்கு மிடையுள்ள காலத்தை நா மிருவரு மிக வருமையாய்ச் செலவு செய்தல்வேண்டும்.

ஏரியல்:—இன்னமும் உளதோ உழைப்பு? எனக்கு நீ சிரமந் தருவதால், வாக்கு நீ யளித்தும் என்பாலிதுகாறும் நிறைவேற்ருத வதனை உனக்கு யான் நினைவுறுத்த இடந்தருவாய்.

ப்ராஸ்ப்பீரோ:—எப்படி யெப்படி இப்பொழுது! சிடுசிடுப்போ? வன்மையுடன் நீ கேட்கவல்லது யாது?

ஏரியல்:—என் விடுதலை.

ப்ராஸ்ப்பீரோ:—அவ்வேளை வருதற்கு முன்னரேயோ? போதும்! (5).

ஏரியல்:—சீரிய சேவகம் யானுனக்குச் செய்திருப்பதை நீ சிந்தனைகொள்ளுமாறு வேண்டுகின்றேன். உன்பால் பொய்யொன்றும் புகன்றிலேன், உனக்குப் பிழையொன்று மிழைத்திலேன், சிடுசிடுப்புமின்றி முணுமுணுப்பு மின்றி ஊழியஞ் செய்துளேன்; முழுவருடம் ஒன்று எனக்குக் குறைப்பதாக நீ வாக்களித்தனை (6).

ப்ராஸ்ப்பீரோ:—எத்தகைய வொரு அவத்தையினின்றுன்னை யான் விடுவித்தேன் என்பதை மறக்கின்றனையோ நீ?

ஏரியல்:—இல்லை.

ப்ராஸ்ப்பீரோ:—மறக்கின்றாய்; மறந்து, உப்புடைச் சலதியின் சகதியை மிதிக்கவும், கூருடை வாடை மீதோடவும், உறைபனியதனால் பொரிந்திருக்கும் பூமியின் நாடியில் எனக்குக் காரியஞ் செய்யவும் சாலப் பெரிதென நினைக்கின்றனை (7).

ஏரியல்:—அல்லேன், ஐய.

ப்ராஸ்ப்பீரோ:—பொய்யிது புகல்கின்றாய் ஏ வன்கண் வஸ்துவே! (8). வயதாலும் வன்மத்தினாலும் வளையமாய் வளர்ந்திருந்த கொடியவச் சூனியகாரி ஸைகொராக்ஸை மறந்தனையோ? மறந்துவிட்டனையோ அவளை நீ? (9)

ஏரியல்:—ஐயனே, இல்லை.

ப்ராஸ்ப்பீரோ:—மறந்துவிட்டனை. மற்று, அவள் எங்குப் பிறந்தவள்? பேசு நீ; சொல்லெனக்கு!

ஏரியல்:—ஐய, ஆர்ஜியரில் (10)

கடுக்காய்க் கப்பலிற்குள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து தூங்கிக்கொண்டிருக்கின்றனர்—என்பது பொருள்.

(3) மெடிட்டரேனியன் என்பது ஆப்ரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் உள்ள ஓர் கடலின் பெயர். பரவை - கடல். அரசனது கப்பலோடு வந்த மற்றைய கப்பல்களை நன்கலைந்து அங்கு மிங்கும் சிதறிப் பிரிந்து போகும்படி செய்தேன்; அரசனுடைய கப்பல் உடைந்து அதனிலிருந்தவர்களெல்லாம் மூழ்கக் கண்டு மற்றக் கப்பலிலிருந்தவர்கள், அரசனையிழந்த பெருந் துயரமுடன் தம் ஊர்நோக்கிப் போவாராகி இப்பொழுது மெடிட்டரேனியன் கடல் மீது தம் கப்பல்களைச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். பிரிந்துபோன அக்கப்பல்களும் அங்கு இப்பொழுது சேர்ந்துகொண்டு விட்டன—என்பது பொருள். மிதவை=மிதப்பதற்கு இடமாகிய கடல்.

ஆன்ற அவன் ஆகாரம் - மேன்மை வாய்ந்த அரசனது உடலம். வங்கம் - கப்பல். அவர் - அக்கப்பல்களில் உள்ளவர்.

(4) நண்பகல் கடந்து இரண்டுமணி நேரமேனும் ஆகியிருத்தல் வேண்டும்—என்பது பொருள்.

(5) இட்ட வேலையெல்லாம் செய்வதற்குத்தான் இசைந்திருப்பதாகச் சிறிதுமுன்னர் இயம்பிய இவ் வேரியல் இப்பொழுது இவ்வாறு முரணுகின்றது. இதன்மனம் ஒருவழி இருப்பதில்லை போலும். மேலும், மந்திரவாதிகளால் ஏவல்கொள்ளப்பட்ட குட்டிச்சாத்தன்களே இவ்வாறுதான் அவனுக்குக் கட்டுப்பட்டிருக்க ஆற்ருமல் பொறுமையற்று முரணும் என்று இந்திரசால நூல்கள் கூறும்.

(6) முதலில் என்னை உன் ஏவலில் அமர்த்திக்கொண்டபோது நான் எவ்வளவுகாலம் உனக்கு ஊழியஞ் செய்யவேண்டுமென்று ஒப்பந்தம்செய்துகொண்டோமோ, அதனில் ஒருவருடம், (நான் பணிவிடை செய்யும் நேர்மையைப் பாராட்டி, அதற்கீடாய்) தள்ளிவிடுவதாக வாக்களித்திருக்கின்றாய்-என்பது பொருள். அதன்படி, "குறித்த காலத்திற்கு ஒருவருடம் முன்னரே எனக்கு நீ இப்பொழுது விடுதலை கொடுக்கவேண்டும்" என்று ஏரியல் வற்புறுத்துகின்றது.

(7) சலதி - கடல், சகதி - சேறு. கூருடை வாடை - சுறுக்கென்று அடிக்கின்ற வாடைக் காற்று. குளிர்ச்சியும் வெப்பம்போல் பொரித்துவிடுமாகையால், உறைந்த பனியினுல் பொரிந்திருக்கும் பூமி, என்கின்றான். நாடி - உள் துவாரம். "உன்னை எவ்வித அவத்தையிலிருந்து நான் காப்பாற்றினேன் என்பதை மறந்து, இந்தச் சிறிய காரியங்கள் எனக்காகச் செய்வது மிகுந்த சிரமமென்று இப்பொழுது முணுமுணுக்கின்றாயா!" - என்பது பொருள்.

(8) வன்கண்-குரூரம். ஏரியல் ஆவி உருவமே உடையதாதலின், அதனை, 'வஸ்துவே' என அழைக்கின்றான்.

(9) ஸைகொராக்ஸ் என்னும் இந்தச் சூனியகாரியின் சரிதை, இனி இவர் பேச்சிலிருந்தே தெரியவரும்.

(10) ஆர்ஜியர், இப்பொழுது ஆல்ஜியர் என அழைக்கப்படுகின்றது; இது அரேபியாவில் உள்ள ஒரு நகரம்.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்—சூதுபோர்ச் சருக்கம்

[191-வது பக்கத் தொடர்ச்சி]

பெயர்ந்து படரும் சேனையின் முன்னணியில் வலியுடை வீமன் செல்லவும், பின்னர் அருச்சுனன் தகவுடன் போதவும், இவர்களுக்கப்பால் தருமன், நகுல சகாதேவர் புடைசூழ, உடுக்களாற் சூழப்பட்ட தண் கதிரோனென்னப் புறப்பட்டான். புறப்படலும் சிற்றரசர் அனைவரும் அவனைப் பின்தொடரலாயினர். தொடரவே மகளிர் யாவரும் பிடிகளின் மீதேறினர்; திரௌபதியும் சிவிகையேறித் தருமனுடன் சென்றாள். இவ்வாறு செல்பவர் முன்னர்ப் பல உற்பாதங்கள் தோன்றின. நூல்வல்லோர் வருந் துன்பத்தைத் தெரிவித்தும் தருமன் அவர்கட்குச் செவிசாய்த்திலன்.

மடந்தைய ரளகமு மாந்தர் மாலையு
முடைந்தகு கடகரி மதமு முன்னியே
தடந்தொறு முரலளி தமரி னண்புறத்
தொடர்ந்துடன் வரவரச் சோலை யெய்தினர்.

[மகளிரது கூந்தலையும், வீரர்களது மாலையையும், யானைகளின் கன்னங்களினின்று உடைந்து பெருகும் மதநீரையும் நினைந்து, வழியிலுள்ள தடாகங்களிலும், மலர்களிலும் ஒலித்து மொய்க்கும் வண்டுகள் அவைகளை விட்டுச் சுற்றத்தார்போல் பாண்டவர் முதலோரிடம் நட்புப் பாராட்டிப் பிரியாமல் தொடர்ந்து நெருங்கி உடன்செல்லச்செல்லச் சோலையை அடைந்தார்கள்]

சேனையின் அரவத்தாலும், எழுந்த தூளிகளின் மிகுதியாலும், தேன் சேகரிப்பதில் சற்றே தடைப்பட்ட வண்டுகள், புதிய நாற்றத்தை உணர்ந்து அதன் வழிச் செல்லலாயின. நல்லிலக்கணமுள்ள மகளிரது கூந்தல்கள் இயற்கைமணம் பெற்றிருப்ப தியல்பு. எனவே தருமனுக்குப்பின் சென்ற மகளிரெல்லாம் நல்லிலக்கண முள்ளவராயினர். மகளிர் தொகுதியாலும் படையின் மிகுதியாலும் அளகமும் மாலையும் மதமும் அதிகரிக்கவே, அவைகளைப் பின்தொடர்ந்த அளியின் கூட்டமும்மிக்கது. விடாமல் தொடர்ந்து சென்றமையால் அளிக்குலம், பிரிவாற்ருது பின்தொடர்ந்த சுற்றத்தார் கூட்டத்தை யொத்தது. வரவர வென்னும் அடுக்கிலுள்ள நயம் நோக்கத் தக்கது. சற்றுத்தூரமே தொடர்ந்துபிறகு நீங்கிவிடாமல்செல்லுமிடமெல்லாம் விடாது தொடர்ந்தன. அவ்வாறு அவை சென்றதற்குக் காரணம் மணத்தின் பெருக்குக் குறையாமையே. இயற்கையாகவே நறுமண முள்ள மகளிர் கூந்தல் அம்மண மருது; கரியின் மதமும் என்றும் பொழிதலால் மணம் நீங்காது; மாந்தரது மாலைகளும் வாடாதமலர்களையே யுடையன போலும்.

இனி, தொண்ணூற் றிரண்டாம் பாட்டுமுதல் நூற்றுஆரும் பாடல் வரை, கவி, மருதம் முல்லை குறிஞ்சி நெய்தல் என்னும் நிலங்களை வருணிக்கின்ருர்.

சம்பகம் பாடலந் தமால நாண்மர்
வம்பெழ மிலைச்சுவார் வாவி யாடுவார்
செம்பலா வாமிரங் கதலித் தீங்கனி
யும்பரி னமிழ்தென வுடன ருந்துவார்.

[சண்பகம் பாதிரி பச்சிலைமரங்கள் இவைகளின் அன்றலர்ந்த மலர்களை நறுமணமெழச் சூடிக்கொள்வார்கள்; தடாகங்களில் நீராடுவார்கள்; செழுமையான பலா, மா, வாழை இவைகளின் இனிய கனிகளைத் தேவர்களது அமிழ்தத்தைவிடச் சிறந்ததென எண்ணி உண்பார்கள்.]

இதுவும் இதற் கடுத்தகவியும் மருதநிலத்தை வருணிக்கும். சோலையை அடைந்தவர்கள் அச்சோலையிற் செய்த காரியங்கள் இன்னவையென இவை தெரிவிக்கின்றன. மருதநிலம் நாடும் நாடுசார்ந்த இடமும் ஆதலால், வயலும் பொழிலும் கூறவேண்டியதாயிற்று. கவி சுருங்கச்சொல்லிப்போகுந் திறத்தினை நாம் பல முறையும் காட்டியுள்ளோம். பூக்கொய்தல், நீர் விளையாடல், உண்டாடல் என்பன பெருங்காப்பியத்திற் குரியவை. அவற்றை ஒவ்வொரு படலத்தில் விவரிப்பது வழக்கம். வில்லி அதற்கிசையாதவராய்ப் பூக்கொய்படலத்தை முதலடியில் அடக்கியும், பின்னர் மூன்ரும் நான்கா மடிகளில் உண்டாடலை உணர்த்தியுமுள்ளார். இக்கவியில் வடசொற்கள் அளவு கடந்து அமைந்து கிடக்கின்றன. முதலடியில் நாண்மலர் என்னும் தமிழ்த்தொடர் ஒழிய, மற்றைய சீர்களெல்லாம் வடமொழிகளால் ஆனவை. அன்றியும் வாபீ, ஆமிரம், கதலி, அம்ருதம் என்பனவும் வட சொற்கள். மாமரத்தை ஆமிரம் என்று தெரிவிக்கவேண்டியதில்லை. இவ்வாறே இக்கவி சிற்சில விடங்களில் தெங்கிற்கு நாரிகேளம் என்பார். பலா, மா, வாழைகள் முக்கனிகளெனச் சிறப்பித்துக்கூறப்படுதலால் அவை முதலிற் சொல்லப்பட்டன. குதலைமொழிக் கடைசியர் கொடுத்த கமுகின் பாளையைச் சூடியும் கனியுண்டு களித்தும் மருத நீங்கினர்கள். பின்னர்ப் பாண்டவர் முல்லைநிலத்தைச் சார, அந்நிலத்திற்குரிய முடைவீசும் இடையர் வெண்ணெய் முதலியவைகளைக் குடம்நிறையக் கொணர்ந்து காண, காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லைநிலத்திற்குரிய பல மலர்களின் மணங்களையும், முதன்மையாக முல்லைமலரின் நறுமணத்தையும் நுகர்ந்து அந்நிலத்தைச் சேர்ந்தார்கள். தருமன் அறமுடை யரசனுதலால் அவன் கருணை வாய்ந்தவனென அறிந்த மான்கூட்டங்கள், தங்களுக்கு அவனாலும் அவனது பரிவாரத்தாலும் ஒருவகைத் தீங்கும் நேரிடாதென அறிந்து இடம் விட்டுப் பெயர்ந்து வெருவி யோடில.

செருவிளங் காளையர் சேனை யின்றிறம்
வெருவிளம் பொதுவியர் விழைந்து காண்பபோன்
மருவிளங் கிதழ்நீள் வனமு மாமலர்க்
கருவிளங் கண்கொடு கலந்து கண்டவே.

189145

[போர்த்தொழிலில் வல்ல, இளங் காளைகள் போன்று வன்மை மிக்க, பாண்டவர்களது சேனையின் சிறப்பை, மருளுந் தன்மையுள்ள இளமையையுடைய யாதவக்குல மங்கையர் விருப்பத்துடன் காண்பதுபோல, மணம் பொருந்திய கொன்றைமரங்களாலான பெரிய காடுகளும் அப்படையைக் கருவிளமலரின் கண்களைக்கொண்டு கலந்து பார்த்தன.]

பெரியதொரு படை ஓர்வழிச் செல்லுமானுல், அதனை நோக்கப் பலர் கூடுவர். முல்லைநிலத்தில் அது சென்றபோது அந்நில மடந்தைய ரதனைக் காண விழைவதியற்கை. அம்மங்கையர் நகரங்களிற் சென்று பழகியிராததனுல் தங்களுக் கியற்கையான அச்சம் நீங்கப்பெற்றிலர். நகரத்தினின்று அரசனுடன் புடைபெயரும் இப் பெரும்படையைக் காண அவர்கட்கு அவாவுண்டேனும், சற்றேஅச்சத்தால் மறைந்தொதுங்கிக் காண்கின்றனர். காட்டிலும் காடு சார்ந்த இடங்களிலும் தமதெண்ணம்போல் ஓடித் திரிந்து உரம் பெற்ற யாக்கையை யுடையவராய் ஓங்கி வளர்ந்திருந்ததனுல் அவர் கொன்றைமரங்களுக்கு உவமை கொண்டார். அவர்கள் கண்கொண்டு பார்த்தது, கொன்றைத் தன்னையடுத்துத் தன்னுடன் சேர்ந்து வளர்ந்திருந்த கருவிளைமலர்க் கண்களைக் கொண்டு பார்த்ததை நிகர்க்கும். கருவிள மலரைக் கன்னியர் கண்களுக்கு ஒப்பிடுவதுண்டு. ஆகவே பொதுவியர் விழைந்து கண்டதுபோல் அங்குளமரமும் கண்டது. பொதுவியர்பலர் கூடியதுகொன்றைக்காடுபோன்றது. இத் தற்குறிப்பேற்றவணி வேறு சிறப்பான அணிகளில்லா விடத்துச் சற்றே மகிழ்ச்சியைத் தருகின்றது. இனி 'இதழ் நிறைந்த பெரிய காடுகளும்' என வெடுத்து கொன்றைமரங்கள் கொண்ட அக்காடானது தன்னுடைய கண்களான கருவிள மலர்கொடு நோக்கிற்று என்றும் கூறலாம். முன்னைய பொருளில் கொன்

றையே காடாகிக் கண்கொண்டு நோக்கியது; பின்னைய
பொருளில் கொன்றையை யுடைய காடானது கண்
கொண்டுநோக்கிற்றென வமையும். பொருள் ஒன்று
போல் தோன்றினும் சிறிது மாறுபாடுண்டாம். கலந்து
கண்டதென்னவே அவையிரண்டும் நெருங்கிச் செழி
த்து வளர்ந்திருந்தமை பெறப்பட்டது. மருதநிலத்
திற்கும் குறிஞ்சி நிலத்திற்கும் இடையே யிருந்த
இடையர் பொதுவர் எனப்பட்டார். வருணனையும்
அவ்வாறே ஒழுங்குபடச் செல்கின்றது. மருதத்தை
யும் முல்லையையும் கூறியபின்னர்க் கவி குறிஞ்சியைக்
கூறத் தொடங்குகின்றார். பாண்டவரும் சோலைகளை
யும் வயல்களையும் கடந்து, காட்டை யடைந்து அத
னையுங் கடந்து பின்னர் மலைப்புற மடைந்தனர்.

குன்றுறை கடகரிக் குழாங்கள் சேனையி
ஞென்றிய களிறுகண் டேகி யோடின
துன்றிய புறவிபச் சுவடு கண்டுடன்
சென்றில வெருண்டிவன் சேனை யானையே

[குன்றுகளில் வாழும் மதயானைக் கூட்டங்கள் பாண்ட
வர்களது சேனையிற் பொருந்தியிருந்த யானைகளைக்கண்டு
அஞ்சி யோடின; நெருங்கிய வேறு யானைகளின் அடிச்
சுவடுகண்டு தருமனது சேனையிலிருந்தயானைகள் கோபங்
கொண்டு அங்கிருந்து பெயராமல் நின்றன].

இச்செய்யுளில் இயற்கைநிகழ்ச்சி தோன்றுவதால்
இது சிறப்புடைத்து. கவிகள் புனைந்துகூறப் புகுங்
கால், தாம் நேரேகண்டவற்றைக் கூறுதலும், காணாத
வற்றைக் கண்டதுபோல் தம் மனத்தே நினைந்து கூறு
வதும் உண்டு. ஆங்கிலக் கவிகள்போல் நம் மிந்தியக்
கவிகளும் இயற்கைப் பொருள்களை நேரிற்கண்டு அத்
தோற்றத்தைப் பொருத்தமுடைய வுவமைகொண்டு
கூறிவந்தனர். இது சங்ககாலத்தில் நிகழ்ந்தது. பின்
னுட் கவிகளனைவரும் வடநூலிலுள்ள வருணனை
களைத் தம்மதேபோல் கையாண்டோ, அல்லது அவ்
வருணனைகளையே வெவ்வேறு மொழிகளாற் கூறு
வதே இலக்கண மரபென நினைத்தோ இயற்கை வரு
ணனைகளை வெறும் வாய்பாடாக மாற்றிவிட்டனர்.
உதாரணமாகப் பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பொருந
ராற்றுப் படையில் பாடினியை வருணிக்கவந்த கவி

அறல்போற் கூந்தற் பிறைபோற் திருநுதற்
கொலைவிற் புருவத்துக் கொழுங்கடை மழைக்க
ணிலவிதழ் புரையு மின்மொழித் துவர்வாய்ப்
பலவுறு முத்திற் பழிநீர் வெண்பன்

மயிர்குறை கருவி மாண்கடை யன்ன
பூங்குழை யூசற் பொறைசால் காதின்

என்று அப்பாடினியின் காது, மயிரை வெட்டுகின்ற
கத்தரிகையின் குழச்சைப் போன்று இருந்ததெனக்
கூறுவது ஓதுவோர்க் கெவ்வித மகிழ்ச்சியைத் தரு
கின்றது. கூர்ந்து நுண்ணிதின் நோக்கிய இவ்வியற்
கைக் கவி, காதிற்குக் காட்டிய இவ்வுவமையை நாம்
வேறெங்குங் கண்டதில்லை. காதின் வளைவு கத்தரிகை
யின் கைப்பிடியின் வளைவை (கைவிரல் நுழையும் து
வார மன்று) ஒத்திருப்பது வெளிப்படை. ஆயினும்
இது வேறெவர்க்கும் தோன்றவில்லை. பிற்காலத்திய
கவிகளெல்லாம் மலர்களுக்கும் மற்றவைகளுக்கும்
மென்மையிலன்றி வேறுவகையிற் பொருத்தமின்றி
வகைகெடக் காதினை வலிந்து வருணித்து வருந்தி
யுள்ளார். இவ் வியற்கைக்கவியின் நுட்பத்தையும்,
உவமானம் அவருக்கு இயற்கையாய் வருத்தமின்றிப்
பொருந்தினதையும் எண்ணப்புகுவோமாகில் அக்
காலத்திய கவிகளது மாண்பு நம்மைப் பிரமிக்கச்செய்
கின்றது.

வில்லி, காட்டிலே படையுடன் சென்று நோக்கா
விடினும் இவ்விடத்தே இயற்கையி லெவ்வாறு நடந்
திருக்குமென வெண்ணி யெழுதினர். அது உண்மை
யாயினும் அன்றாயினும் நமக்கு உண்மைபோலும்
இயற்கைபோலும் தோற்றுவதே அவரது கவிக்கோர்
சிறப்பாம். நகர யானைகளை நோக்கியும் அவைகளின்
கோலத்தைக் கண்டும், சூழ்ந்தவரது ஆயுதங்களைப்
பார்த்தும் காட்டானைக ளஞ்சியோடின; நாட்டானை
களோ, வேறு அடிச்சுவடுகளைக் கண்டு அவைகளையு
டைய வேழங்களை வெல்லவேண்டுமெனக் கருத்துள்
ளவைகளாய், அப்புறம்அடியெடுத்து வைக்காது காட்
டைநோக்கி நின்றன. இதனால் அவைகள் போர்செய்
யப்பழக்கப்பட்டவை என்பதும்விளங்கும். இயற்கை
யில் அடிச்சுவடுகளைக் கண்ட அளவிலே அவைதாம்
தம்மின யானையின் அடிச்சுவடுகளென அறியும் வல்ல
மை யானைக்கு உண்டோ இல்லையோ என்பதை நாம்
ஆராயவேண்டா. இயற்கையில் வேற்று யானைகளைக்
கண்டவிப் போர்த்திற யானைகள் அவைகளைப் பின்
தொடரவேண்டுமென்றும் அவைகளுடன் போர்
செய்யவேண்டுமென்றும் நினைப்ப தியல்பு. மேலும்
அசைந்தசைந்து சென்றுகொண்டிருந்த யானைகள்
சரேலென நின்று அப்புறம் அகலாமல் பிளிறுவ
தும் நாடகநிகழ்ச்சிபோல் நம்மனதில் நிலையூன்றி நிற்
கின்றதன்றோ?

— ⁂ —

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[204-வது பக்கத் தொடர்ச்சி]

பாராத வுருவெளியாற் பழித்தனள்கா ணிராவணனை.

மெல்ல மெல்லத் தன் மனத்தவராயின இவ் வண்
டேறுகோதை மடவார்தான் முன்னர்ச் சூர்ப்பண
கை யுணர்த்திநின்ற அந் நங்கைபோலெனத் தேறுதற்
கவாவுஞ் சிந்தையுடைய இராவணன்,

பூண்டிப் பிணியா னுறுகின்றது
தான்பொ ருதாள்
தேண்டிக் கொடுவந் தனள்செய்வதொர்
மாறு முண்டோ
காண்டற் கினியா ளுருக்கண்டவட்
கேட்கு மாற்றால்
ஈண்டிப் பொழுதே விரைந்தெங்கையைக்
கூவு கென்றான்

[இப்படி நான் காமநோய்கொண்டு வருந்துவதற்குச்
சகியாதவளாய் அவளே என்னைத் தேடிக்கொண்டு வந்தி
ருக்கின்றனள். அவளுக்கு நான் செய்யக்கூடிய கைம்மா
றும் உளதோ! காண்பதற்கு இனிய இச்சீதையின் வடி
வத்தைக் கண்களாற் கண்ட சூர்ப்பணகையைக் கேட்டு
நான் ஐயந் தீரும்படி, இப்பொழுதே இங்கு விரைவாக
என் தங்கையைக் கூப்பிடுங்கள் - என்றான்]

தன்னைத் தேடிவந்தனளாம் ஒரு நங்கை, அவளு
க்குத் தான் கைம்மா றென்னசெய்வதென்ப தொன்
றுமே தெரிந்ததில்லையாம்! பித்தனிவன், தனக்குக்
கூற்றாய் நின்ற குலச்சனகியைக் கண்டனன்போல்
கொண்டாடுகின்றான். நெடுந்தறியதனைப் பிளந்து தன்
னெதிரே தோன்றிய மாநுடமடங்கலைக் கண்டு கன
கன், "மைந்தா என்றன் கையில் அரியைக் காட்டித்
தந்தாய்" எனத் தன் புதல்வனை மகழ்ந்ததற் கிணை
யாய் நிற்கின்றது இங்கிவ்விராவணன், சீதை தன்னை
வலிந்து தேடிவந்தனள் என உவந்துரைக்கு மிந்தச்
செய்தியும். "சொன்ன அரி கொலோ" என்று அவ்
விரணியன் வினவியாங்கே, இராவணனும், 'சொன்ன
அரிவை இவள் கொலோ' என வினவுதற்குத் தன்
தங்கையை வருவிக்க வேண்டுமென்றான். பகையாற்
கேட்டான் இரணியன், பரிவாற் கேட்டான் இரா
வணன்; அதுவே வேற்றுமை.

என்றா னெனலுங் கடிதேகினர் கூவு மெல்லை
வன்றா ணிருதக் குலம்வேரற மாய்த்தல் செய்வா
ளொன்றா தகாமக் கனலுட்டெற லோடு நாசி
பொன்றாழ் குழைதன் னொடும்போக்கினள் போய்ப்
[புகுந்தாள்.

[என்று சொன்னதும் ஏவலாளர் விரைந்து சென்று
கூப்பிட்டவளவிலே, வலிய கால்களையுடைய இராக்கத
குலத்தை அடியோடு அழிக்க ஏற்பட்டவளாகி, இராமன்
பால் கொண்ட பொருந்தாத காமத்தீ தன் மனத்தைச்
சுட்டதனால் மூக்கையும், பொன்னாற் செய்த குழைகளை
யணிந்த காதுகளையும் இழந்தவள் வந்துசேர்ந்தாள்.]

பொய்ந்நின் றநெஞ்சிற் கொடியாள்புகுந்
தாளை நோக்கி
நெய்ந்நின் றகூர்வா ளவன்நேருற
நோக்கு நங்காய்
மைந்நின் றவாட்கண் மயிலின்றென
வந்தென் முன்ன
ரிந்நின் றவளாங் கொலியம்பிய
சீதை யென்றான்

[வந்துசேர்ந்த, பொய்நிறைந்த நெஞ்சுடைய கொடிய
சூர்ப்பணகையை, நிணந்தோய்ந்த கூரிய வாளையுடைய
இராவணன் பார்த்து, "நங்கையே, நேராகப்பார், மையி
ட்ட வாள்போன்ற கண்களையுடைய ஒரு மயில் வந்து
நிற்பதுபோல என்முன் இங்கே வந்து நிற்கின்ற இவள்
தானு நீ சொன்ன சீதைஎன்பவள்" என்று கேட்டான்]

இருபது கண்ணினு னிவன் காட்டிய உருவினைக்
கண்டிலள் தங்கை. ஒருவர்க்குற்ற உருவெளித் தோ
ற்றத்தை மற்றவர் காண்ப தெங்ஙனம்? மற்று, உரு
வெளித் தோற்றத்தையே அவன் உவந்துரைக்கின்
றான் என்பதையும் அறிவாளிவள். பெரிய தன் தமை
யனைப் பரிகசிக்குமொரு புந்தியளாயினள். "காண்ப
து உருவெளியென வுணரவல்ல அறிவையும் உகுத்
தனையோ; என்னையழைத்து நீ இது கேட்கின்றாயே?
வலியத்தான்வந் துன்முன் நிற்பாளோ அச்சீதை,"
என இகழும் எண்ணமுடன் அவ் வஞ்சகக்கள்வி,

செந்தாமரைக்கண் ணொடுஞ்செங்கனி வாயி னொடுஞ்
சந்தார் தடந்தோ ளொடுந்தாழ்தடக் கைக ளோடு
மந்தா ரகலத் தொடுமஞ்சனக் குன்ற மென்ன
வந்தா னிவனு குமவ்வல்வி லிராம னென்றாள்

[செந்தாமரைக் கண்களோடும், சிவந்தகொவ்வைக்கனி
போன்றவாயொடும், அழகு நிறைந்த விசாலமான தோள்
களோடும், நீண்டு தொங்குகின்ற பெரிய கைகளோடும்,
அழகிய மாலை அணிந்த மார்பினுடனும், மையால் ஆகிய
ஒரு மலைபோல வந்திருக்கும் இவன்தான் வலிய வில்லை
யுடைய அந்த இராமன் ஆவான்—என்றாள்.]

என்ற தவ்வளவும் பொய். இராவணன், "நோக்கு
நங்காய்" என்று காட்டிய சீதையின் உருவெளித்
தோற்றத்திற்கு மாறாக, இராமன்பால் மயல்பூண்டு
மதியுழன்றிருந்த தங்கை அவ்விராமனது உருவெளி
யையேகண்டு அதனை ஆர்வமுடன் வருணித்து இங்
ஙனம்தன் தமயன்முன் தகவேதுமின்றிப்பிதற்றினள்
எனக்கருதி இதனைக் கம்பசித்திரங்களுள் ஒன்றாகக்
கொண்டாடுதல், கம்பர் கவிநயக் கட்டுரையாளர்களுக்
குத் தொல்லைமரபாயிருக்கின்றதெனினும் இன்னதே
யோ கம்பர்தம் கருத்தென அயிர்ப்பதற் கொருவரு
மஞ்சவேண்டா. உருவெளி யென்பது உரைத்தபடி
வருவித்தற் கியன்றவோர் செய்தியன்று. அதற்குரிய
மனநிலைவேறு; கலையாத காமம் மேன்மேல் மூண்டு
மதியினைக் கதுவிநிற்கின்ற தன்மையும் அதற்கின்றி
யமையாதது. சூர்ப்பணகை இப்பொழுது அச்செவ்
வியள் அல்லள். முன்னே னழைப்ப எதிர்வந்து நிற்கு
மிவளை இந்நிமிடம் காமத்தின்கவற்சிகைப்பற்றலரிது.
ஆதலின், தான் உண்மையிற் கண்டவோர் உரு
வெளித் தோற்றத்தை இங்ஙனம் உவந்துரைத்தவ
ளாகமாட்டாள். மற்று, இன்னதன் பொருள் யா
தென் றுணர்தல் வேண்டும்.

தம்மைக் கெடுத்தவரினும் தம்மாற் கெடுக்கப்பட்
டவர்களுக்கே மேன்மேலும் கொடுமைகள் இழைப்
பார் தீயோர் என வோர் ஆங்கில ஆசிரியர் (ஜார்ஜ்எலி
யட் என நினைக்கின்றோம்) கூறுகின்றார். கயவர்தம்
இயற்கையிது அயிர்க்கப்பாலதன்று. இச்சழக்கியோ
கயமையின் வெற்றிக்கொடி போல்பவள். இராவ
ணனை மூலநாசம்பெற முடிக்க முயல்கின்றவள். வன்
தாள் நிருதக்குலம் வேரற மாய்த்தல்செய்வாள். வில்
லொன்றிற் கடிகைமூன்றில் கரனே முதலாய கணக்
கில் பல்கோடி அரக்கர்வெள்ளத்தை விண்ணிலேற்
றிய இராகவன் பேராண்மையை, இலக்குவன் கொய்
யாது விட்டிருந்த கண்கொண்டு பார்த்திருக்கின்றாள்.
அன்னதோர் வீரன்முன் இராவணன்றன் ஆற்றலுந்
தான் நெடுந்தூரஞ் செல்லவல்ல தன்றென்பதை இவ
ள் ஓர்ந்திருப்பது எளியதே. மனைவியை இழந்தால்
இராமன் ஒருகால் தன்னை இன்னும் ஏற்றுக்கொள
லாம் என்று மயங்கற்குரியவோர் இழுதை இவள்
ஆவாளெனினும், அந்த ஆசையினும், தன்னைப் பங்
கஞ்செய்தவர்களைத் தண்டிக்கவேண்டுமென்னும்வன்
மமே இப்பொழுது இவள்பால் விஞ்சிநிற்கின்றது.
அன்னதற்கு இராவணனை ஏவுகின்றாள். இக்காரியத்
தில் சீதையை ஓர் பெறற்குரிய ஊதியமாய் இராவண
னுக்குக் காட்டுகின்றாள்; அவ்வளவே. சீதையை
யவன் அடையாவிடினும் அதனால் இவளுக்குயாதும்
குறைவில்லை. இராமனுடன் இகலி யிவன் வெல்வத
னினுந் தோற்பதே அதிகமும் நேர்வதியற்கை யென்
பதைத் தெரிந்துகொள்ளுந் தகுதி யில்லாதவளல்லள்
இவள். வென்றானேல் தனது வஞ்சினமுடிந்து பழி
தீர்த்துக்கொண்ட செருக்குங் களிப்பும் அவளதா
கும். தோற்றாலோ அவ்விராவணன் தலைகளோடு போ
கின்றது அத்தோல்வி. இவ்வளவும் உன்னி யிவள்
இராவணனைச் சீதையின்பால் முடுக்கியிருக்கின்றாள்.
இப்பொழுது இராவணன் தன்னை யருகழைத்து,

"இவள்தானோ நீ இயம்பிய காரிகை" என வெற்றிடத்தைக் காட்டிக் கேட்குமளவில், தான் ஊட்டிய நஞ்சு அவன் உதிரத்தில் புகுந்து வேலைசெய்கின்றதென்பதை யுணர்ந்தவோர் கொடுமனக் களிப்பின் மிகுதியால் அவனைப் பழிப்பாட்டங் காண்பாளாகி, "ஆம், ஆம், காண்கின்றேன், அவ் வல்வில் இராமனை" என்று தன்னுளே இகழ்ந்து உரைப்பதல்லால், இராமனது உருவெளித் தோற்றத்தால் உணர்வழிந் துரைத்தவோர் மாற்றமோ இதுவன்று. "சீதைக் கவாவி நீ இவ்வெற்றிடத்தைத் துழாவுவதிற் பயனில்லை. வல்வில் இராமனொருவ னிருக்கின்றான். அவனைக் கணக்கெடுக்க மறந்தனையே, பேதாய்," என்னுந் தொனியு மிதனுள் உருவி நனி வருகின்றது. திரௌபதியை நினைத்துவந்த கீசகற்கு வீமனை விளம்புவது போல்வதோர் கொள்கையாம் இது. கேடு சூழ்ந்த சூர்ப்பணகையின் வாய்க்கே, வழங்கிய இவ்விழிவுடைப் பொய்யுரை பொருந்தும். அன்புடைய உண்மையின் உருவம் போல்வாள் உத்தமி டெஸ்டிமோனாவின்பால் ஒத்தெல்லோவிற்கு அளவிகந்த அவ்வியம் உண்டாம்படி வஞ்சனைகள் செய்தவந்தப் பொல்லாத பேயன் இயாகோ, மனம் பிதிர்ந்து உணர்வழிந்து அவ்வொத்தெல்லோ வீழ்ந்தது கண்டு, Work on. My medicine work! Thus credulous fools are caught" என வாய்விட் டிளித்தானெனின், அவனினத்தைச் சேர்ந்த இச்சழக்கிஇங்கு அதனையே வேறோர்வகையில் பிறிது நவின்று தன் கொடுமையின் பாழ்வயிற்றை நிரப்பிக் கொள்கின்றனள். இன்னதே இச்செய்யுளின் நோக்கமும் பயனுமாகும். மற்று, இராமனது உருவெளியைத் தான் கண்டனள்போல் கூறுவது பொய்யென்றும், இணையிலா இவள் வன்னெஞ்சக் கொடுமையின் செலவே அப்பொய்யாகத் தோன்றியதென்றும் தெரிந்துகொள்ளற்கு உதவியாகவே, "பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள்" என்று முன்செய்யுளில் சூர்ப்பணகையின் இழிவைக் கம்பர் சிறப்பித்திருக்கின்றனர் என்பதை மறத்தலாகாது.

இராவணனே இத்துரம் ஆராயவல்லவனல்லனாதலின், தங்கையிவள் இவ்வண்ணம் தடுமாறுவதென்னென வியந்து,

பெண்பா லுருநா னிதுகண்டது
பேதை நீயீண்
டெண்பா லுமிலா தஹொரா ணுரு
வென்றி யென்னே
கண்பா லுறுமா யைகவற்றுதல்
கற்ற நம்மை
மண்பா லவரேகொல் விளைப்பவர்
மாயை யென்றான்.

[நான் பார்த்த உருவம் பெண்வடிவா யிருக்கின்றது. ஏ, பேதையே, நீயோ இப்பொழுது எத்திசையிலும் இல்லாத ஒரு ஆண் உருவம் என்கின்றாய். என்ன விது! கண்ணுக்கெதிரே மிக்க மாயைகள் செய்து மயக்குதற்குப் பயின்றிருக்கின்ற நம்மை, மனிதர்களா மாயைகள் மிகச் செய்து வஞ்சிக்க வல்லவர்கள்—என்றான்]

இதற்கு, ஒருசார் உண்மையைக் கூறுமாற்றால் எளிதில் எதிர்விளம்பிவிடலாம். ஆதலின்,

ஊன்று முணர்வப் புறமொன்றினு மோட லின்றி
யான்று முளதா நெடிதாசை கனற்ற நின்றாய்க்
கேன்று னெதிரே விழிநோக்கு மிடங்க டோறுந்
தோன்று மனையா ளிதுதொன்னெறித் தாகு மென்றாள்

[சீதையின் நினைவில் அழுந்தியுள்ள உன் அறிவானது அதனைக் கடந்து வேறொன்றிலும் செல்வதின்றி, மிகுந்திருக்கின்றபெரிய காமத்தீயால் சுடநின்ற உனக்கு, உன் கண்கள் எதிர்நோக்கும் இடங்களில் எல்லாம், அந்தச் சீதையே பொருந்திக் காணப்படுவாள். இது பழையதோர் செய்தி—என்றாள்]

இதன்மேல் இராவணனுக்கு ஐயமொன்று விளைவது இயற்கையே—

அன்னா ளதுகூ றவரக்கனு மன்ன தாக
நின்னா லவிரா மனைக்காண்குறு நீரெ னென்றா
னெந்நா ளவனென் னையித்தீர்வரு மின்னல் செய்தா
னந்நாண் முதல்யா னுமயர்த்தில னாகு மென்றாள்

[சூர்ப்பணகை அவ்வாறு கூற, இராவணனும் அவளை நோக்கி, "அவ்வாறே இருக்கட்டும், உன்னால் அந்த இராமன் காணப்படுவதற்கு யாது காரணம்" என்றான். அதற்கு அவள், "என்றைக்கு அவன் இந்த நீக்கமுடியாத தீமையை எனக்குச் செய்தானோ, அன்று முதல் நானும் அவனை மறந்திலேன்"—என்று சொன்னாள்.]

சுருக்கென நினைக்கும் புந்தியளிவள் சூழ்ந்துரைத்த இப் பிரமரகீட நியாயத்தைக் கேட்ட இராவணன், "ஆமாம் அது அடுக்கும்" என்று ஓவ்விவிட்டான். பொய்யுடையோர் பொருந்தப் பேசார். "சீதையை நீ கொண்டு, யான் கொண்டோடும் வண்ணம் இராமனைத் தருதியென்பால்" என்ற வாய் புலராமுன்னம் "இதனைச் சொன்னபின் உயிரை நீப்பான் துணிந்தனென்" என்றவள், மீண்டுமிங்கு "வன்மத்தால் இராமனை மறந்திலேன்" எனவுரைப்பாள். கைதவக் கள்வியவள் கட்டுரைகளுக்கு ளடங்கிய முரண்களை, இம்மையல்சேர் மதியினன் காண்ப தெங்ஙனம்!

தமிழ்ப் பாடம் 62.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[206-வது பக்கத் தொடர்ச்சி]

வாகுகன் கொணர்ந்த தேரில் அயோத்திமன்னன் விரைந்தேறித் தமயந்தியின் திருநகர்க்கு வழிக்கொண்டான். அந்தத் தேர் சென்ற வேகத்தைப் புகழேந்தி மிகவும் அழகாகச் செப்புகின்றார்.

முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே—சந்தவிரைத்
தார்குன்று மெல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்றா னூர்கின்ற தேர். 44.

பதப்பிரிவு:—முந்தை வினை குறுக மூவா மயல் கொண்டான் சிந்தையினும் கடுக சென்றது சந்தம் விரை தார் குன்று மெல் ஓதிதன் செயலை தன் மனத்தே தேர்கின்றான் ஊர்கின்ற தேர்.

அன்வயம்:—சந்தவிரைத் தார் குன்று மெல் ஓதிதன் செயலைத் தன் மனத்தே தேர்கின்றான் ஊர்கின்ற தேர், மூவா மயல்கொண்டான் சிந்தையினுங் கடுக, முந்தை வினை குறுக, சென்றது.

பதவுரை

சந்தம் - அழகையும்
விரை - வாசனையையும் (உடைய)
தார் - பூமாலையானது
குன்று - நீங்காத
மெல் - மென்மையாகிய
ஓதிதன் - கூந்தலையுடைய தமயந்தியின்
செயலை - (இரண்டாம் சுயம்வரம் என்னும்) இக்காரியத்தை
தன் - தன்னுடைய
மனத்தே - மனத்திற்குள்ளே
தேர்கின்றான் - ஆராய்கின்றவனாகிய வாகுகன்
ஊர்கின்ற - செல்கின்ற
தேர் - அந்தத் தேரானது
மூவா - தளராத
மயல் - மோகத்தை
கொண்டான்-கொண்டவனாகிய இருதுபன்னனது
சிந்தையினும் - மனத்தைக் காட்டிலும்
கடுக - வேகமாக,
முந்தை - முன்னைய
வினை - வினையானது
குறுக - தேய்ந்ததால்,
சென்றது - (குண்டினபுரத்தை நோக்கி) சென்றது

விரிவுரை:—நினைத்தமாத்திரத்தில் மனமானது எவ்வளவு தூரத்திற்கு அப்பாலுள்ள இடத்தையும் சென்றடையலாம். இதனை மனோவேகம் என்பர். இருதுபன்னனுடைய மனம், தமயந்தியின் இரண்டாம் சுயம்வரமாலையைக் கடிதின் பெறவேண்டுமென்னும் ஆசையால் குண்டினபுரத்திற்குப் பாய்ந்தோடுகின்றது என்றால், வாகுகனு யமர்ந்த நளன் ஓட்டிய தேரோ அதனிலும் வேகமாய் ஓடியது. அத்தேரை ஓட்டிய நளன், முன்னை வினையோ, தன்னைத்தான் காண இசைந்ததோ என்று பற்பல விதங்களில் ஆராய்ந்து தமயந்தி தான் இரண்டாம் சுயம்வரம் நாட்டியுள்ளாள் என்று தெரிவித்துக்கொண்ட செயலைப் பற்றி யோசிப்பவனாயினான்.

இருதுபன்னன் மூவா மயல்கொண்டு தமயந்தியின்பால் விரைந்ததும் அவ்வாறு அவாவுடன் விரைகின்றவனுடைய தேரினை நளன் ஊர்ந்ததும் ஏனெனில், முந்தைவினை குறுகியதால். குறுக என்பது இங்குக் காரணப்பொருளில் வந்த வினையெச்சம். குறுகுதல் என்பதற்குச் சிறியதாகித் தேய்தல் அல்லது நெருங்கிச் சேர்தல் என்னும் இரண்டு அர்த்தங்கள் உள. இவைகளில் முதல் அர்த்தத்தை எடுத்துக் கொண்டால், நளனையும் தமயந்தியையும் இதுகாறும் பிரித்துவைத்திருந்த தீவினை தேய்ந்து அகன்றபடியால் அத்தேர் கடுகிச்சென்றது, என்பது பொருள். மற்ற அர்த்தத்தின்படி, நளனும் தமயந்தியும் மறுபடி சேர்வதாகின்ற நல்வினை நெருங்கியதாகையால் அத்தேர் கடுகிச் சென்றது என்பது பொருள். தீவினையாயினும் நல்வினையாயினும், இரண்டும் முன் வினைகளே.

இன்னுமொன்றுஇச்செய்யுளில் உரைப்பதற்கிருக்கின்றது. "சந்தவிரைத் தார்குன்று மெல்லோதி" என்று புகழேந்தி தமயந்தியைக் குறிக்கின்றார். நாயகனை விட்டுப் பிரிந்திருக்கின்ற அக்காலத்தில், மலர் மறந்த கூந்தலையுடையவளாய் நகை முதலியன அதிகம் அணியாமல் இருப்பது மாதர்க்கு இயல்பு. மற்று, மலர்மாலை ஒருபோதும் நீங்காத கூந்தலை யுடையவள் என்று இப்பாசுரத்தில் அவள் வருணிக்கப்பட்டிருக்கின்றனளே.

இதனைத் தெரிந்துகொள்ள, தமிழில் பயில்கின்ற அடைமொழிகளின் தன்மைகளை உணரவேண்டும். சில அடைமொழிகள் பொருளின் இயற்கையை மாத்திரம் கூறுவனவாய் அப்பொருளின்கண் யாதொரு சிறப்பையும் குறிக்காமல் வரும்:-"வெண்மதி எழுந்தது" என்னும் வாக்கியத்தில், வெண் என்பது மதி என்னும் சொல்லிற்கு அடைமொழி. அடைமொழியாயிருந்து அச்சொல் சந்திரன் வெண்மையா யிருக்கும் என்னும் அதன் இயற்கையையே காட்டியது. சந்திரனில், பச்சைச் சந்திரன் சிகப்புச் சந்திரன் கருப்புச் சந்திரன் வெள்ளைச் சந்திரன் எனப் பலநிறச் சந்திரன்கள் இருக்குமானால், "வெண்மதி எழுந்தது" என்றபோது, மற்ற நிறச் சந்திரன்கள் எழவில்லை, வெண்மை நிறமுடைய சந்திரனே எழுந்தது எனப் பொருள்படும். அப்படி இல்லையாகையால் வெண் என்ற அடைமொழி சந்திரனுக்கு இயற்கையாயுள்ள தன்மையைச் சொல்கின்றதே யல்லாது பல சந்திரன்களில் சிறப்பாக எந்தச் சந்திரன் என்பதைப் பிரித்துக்காட்ட வரவில்லை. ஆனால் 'வெண் தாமரை கொண்டுவா" என்போமாயின் அப்பொழுது வெண் என்னும் அடைமொழி செந்தாமரையை விலக்கி வேண்டப்படுவது வெண்டாமரை என்பதைக் குறிப்பித்துக் காட்டுகின்றது. "பச்சைப்புடவை உடுத்து வந்தாள்," என்றால், வெள்ளை கருப்பு நீலம் சிகப்பு மஞ்சள் ஆகிய வருணங்களமைந்த புடவைகள் அல்லவெனக் குறித்து, அவள் உடுத்துவந்த புடவை பல நிறங்களுள் பச்சைநிறத்தது என்பதை அப்பச்சை என்னும் அடைமொழிதெரியப்படுத்துகின்றது. அவ்விதம் பலவற்றினின்று ஒன்றை வேறாகப் பிரித்துக் காட்டுவதற்கு வருகின்ற அடைமொழியைச் சிறப்படைமொழி யென்றும், ஒன்றிற்கு இயற்கையாயுள்ள தன்மையை மாத்திரமே காட்டும் அடை மொழியை இயற்கை அடைமொழி யென்றும் கூறுவர். 'வெண் மதி' என்பதில், 'வெண்' இயற்கை அடைமொழி (Descriptive epithet) 'வெண்தாமரை' என்பதில், அவ் வெண் சிறப்படைமொழி (restrictive epithet). "எல்லாம் வல்ல கடவுள்" என்னுங்கால், ஒன்றும் இயலாத கடவுள் வேறொன்று இல்லையாகையால் 'எல்லாம் வல்ல' என்பன இயற்கை அடைமொழிகள். 'அறிவுடைய மனிதனைக் கண்டேன்' என உரைக்குங்காலையில் அறிவுஇல்லாத மனிதரும் இருக்கின்றன ராகையால், அன்னவரை விலக்கி, அறிவுடைய வொருவனைச் சிறப்பித்துக் காட்டுவதால், அது இங்குச் சிறப்பு அடைமொழியாகும். இப்பாகுபாடு தமிழைப்போல் ஆங்கிலத்திலும் உண்டு.

இயற்கை அடைமொழியும் சிறப்பு அடைமொழியும் அல்லாமல் இன்னுமொருவித அடைமொழியும் தமிழ்ப் பாசுரங்களில் பயின்று வருவதுண்டு. அதனைச் சாதிபற்றி வந்த அடைமொழி என்பர். அரசமாது என்று ஒருத்தியிருந்தால் அவள் கூந்தலிலே எப்பொழுதும் மாலை அகலாது இருக்கும் என்றுவேறொன்றையும் கவனியாமற் கூறிக்கொண்டு வருவது மரபு. "தாமம்சேர் ஓதித்தமயந்தி" என்று முன் (கலி தொடர்காண்டம் 142-வது செய்யுள்) கூறியதும்,

"சந்தவிரைத் தார் சூன்று மெல்லோதி" என்று இச் செய்யுளில் கூறியதும், தமயந்தி தன் கூந்தலில் பூவணிந்து இருக்கும் நிலையை வருணிப்பனவல்ல. அவை அக்கூந்தலுக்கு இவ்விதம் எப்போதும் மாலை அணிந்திருக்கும் தன்மை உளது என்பதை மாத்திரம் காட்டுகின்றன. அதனால்தான் அதற்குச் சாதி அடை என்ற பெயராயிற்று. அதாவது, உண்மையில் இருந்தாலும் இல்லாமற்போனாலும் அந்தச் சாதிக்கு உரிய அடைமொழிகளைக் கொடுத்துச் சொல்லும் வழக்கத்தைக் குறிக்கின்றது. முன் (கலிதொடர்காண்டம், 133-வது செய்யுளில்) நாடு நகரம் அரசு எல்லாம் தோற்றுச் சென்ற நளனை "முடி மன்னன்" என்றதில் 'முடி' என்பது இவ்விதம் சாதிபற்றி வந்த அடைமொழியாகும். பின், இக்கலிநீங்கு காண்டம் 24-வது செய்யுளில் நளனைத் 'தேர்வேந்தன்' என்றும், 37-வது செய்யுளில் 'படைவேந்தன்,' என்றும், தேரும் படையும் அவனுக்கு இப்பொழுது இல்லாமலிருந்தும், அழைக்குங்காலையில், தேர் படை என்பன அரசனுக்குரிய சாதிபற்றி வந்த அடைமொழிகள் என்று கொள்ளல்வேண்டும்.

மேலாடை வீழ்ந்த தெடுவென்று னவ்வளவில்
நாலாறு காத நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதில்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. 45.

பொழிப்புரை:—முதற்சுயம்வரத்தில் தோற்றிருந்தபோதிலும் சலிக்காமல் தமயந்தியைப் பெறவேன் என்று பின்னும் முற்படுகின்ற இருதுபன்னன் ஏறிவர, கொடுமைக் கலியால் சூதாட்டத்தில் மயங்கிக் கெட்ட நளன் கோல்கொண்டு செலுத்திய குதிரைகள், 'மேல் ஆடை விழுந்தது, அதை எடு' என்று இருதுபன்னன் சொல்வதற்குள் இருபத்துநான்கு காததூரம் கடந்துவிட்டன.

குறிப்பு:-குதிரையின் உள்ளம் அறிந்து மந்திரத்தால் ஒட்டும் வல்லமையுடையவன் நளன் ஆகையால், அக்குதிரைகள் இத்துணை வேகமாய் ஓடின.

ஆய் தறிந்த வயோத்தியர்கோ னுங்கதற்கு
மேயவிறம் பூதினனுப் வேட்கைமிகத்-தூயதிறல்
அன்னவன்பா லவ்விஞ்சை யாயுமாறி யாதென்ன
உன்னுவான் றன்னுள்ளே யோர்ந்து. 46.

பொழிப்புரை:—அவ்வண்ணம் ஓடியதைக் கண்ட அயோத்திமன்னன் ஆச்சரியம் அடைந்தவனாகி, தானதனைக் கற்கவேண்டும் என்னும் விருப்பமும்மிகுந்து, தூய்மையான திறமைவாய்ந்த அந்த வாகுகனிடத்தில் அந்த அசுவ மந்திரத்தை ஆய்ந்து அறிகின்ற வகை யாது என்று தன்னுள்ளே சிந்திப்பவனாயினன்.

இலக்கணம்

உயிர் நெடில்களும், ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் என்னும் மெய்யெழுத்துக்களும், ஃ என்ற ஆய்த எழுத்தும் அளபெடுத்துத் தத்தம் மாத்திரைக்கு அதிகமாக ஒலிக்கக்கூடும் என்பதைப் பார்த்தோம்.

ஐ, ஔ, உ, ஆகிய மூன்று எழுத்துக்களும் தத்தம் மாத்திரையிற் குறுகி ஒலிக்கலாவதையும் கண்டோம். அப்படிக்குறுகி ஒலிக்கும்போது அவ்வெழுத்துக்கள் முறையே, ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், குற்றியலுகரம், எனப் பெயர் பெறும். இ என்னும் உயிர் எழுத்தும் சில சமயங்களில் அதற்குரிய ஒரு மாத்திரையினின்றும் குறுகி அரைமாத்திரை பெற்று ஒலிக்கக் கூடும். அப்பொழுது அதற்குக் குற்றியலிகரம் என்பது பெயர்.

குற்றியலுகரத்தில் முடிகிற ஒரு வார்த்தைக்குப் பின் அதனைத் தொடர்ந்து யகரவரிசையில் வருகிற உயிர்மெய்யெழுத்தில் ஆரம்பிக்கின்றவொரு சொல் வருமானால், அந்தக் குற்றியல் உ கரம், இகரமாகத் திரியும். அப்படித்திரிந்த இகரந்தான் குற்றியல் இகரமாம். முன் கலிநீங்கு காண்டம் 12-வது செய்யுளில் 'நீ இங்கு வந்ததி யானினைந்து, என்று இரண்டாவது அடியில் வந்திருப்பதை எடுத்துப் பாருங்கள். வந்தது யான் நினைந்து எனச் சொற்கள் பிரியும். அதனில், வந்தது என்னுஞ் சொல்லில் ஈற்றில் து என்னும் எழுத்தில் உள்ள உகரம் குற்றியலுகரம். (வந்தத்உ). இந்தக் குறுகிய உ விற்குப் பின்னர் அடுத்த வார்த்தையாகிய யான், என்பதின் முதல் எழுத்தாகி யா வந்திருக்கிறது. ஆகையால் அந்த உகரம் இகரமாகத் திரிந்துவிட்டது. திரிந்துவந்து (த்இ) 'வந்ததி யான்' என நிற்கின்றது. அப்படி யகரம் வருவதால் உகரம் மாறி ஆகின்ற இகரத்திற்கு உச்சரிப்பில் அரைமாத்திரை தான் கொடுக்க இயலும். அது குற்றியலிகரம்.

அந்தக் குற்றியலுகரம் என்ன தொடர்க் குற்றியலுகரமாயிருந்தாலும் சரி, யகரம் பின்னால் வந்தால் இகரமாக மாறியே தீரும். வந்தது யான், என்னும் உதாரணத்தில் உள்ள குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். அது 'வந்ததியான்' எனக் குற்றியலிகரமாகத் திரிந்தது. இந்தச் செய்யுளில் "ஆயும் ஆறு யாது என்ன' என்று வரும் மூன்றுமடியில் ஆறு யாது என்பது 'ஆறியாது' எனமாறி இருப்பதைப் பாருங்கள். ஆறு என்பதன் ஈற்றிலுள்ள உகரம் நெடிற்றொடர்க் குற்றியலுகரம், அதன்பின், யாது என யகரத்தில் துவக்குகின்ற வார்த்தை வந்ததால் இந்த உகரம் இகரமாகத் திரிந்து ஆறியாது என ஆயிற்று. மற்றத் தொடர்க் குற்றியலுகரங்களும் அவ்வாறே திரியும்.

குற்றியலுகரமாயில்லாமல் முற்றியலுகரமாயிருந்தால் அது யகரம் வர இகரமாய்த் திரியாது. கடு யாது, என்னுங்கால் கடு என்பதன் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரம் அன்று; ஆகையால் கடுயாது என்றே நிற்கும், கடியாது என ஆகாது. மற்றுக் காடு யாது, என்பது காடியாது என ஆகும். ஏனெனில் கா நெடிலாகையால் டு விலுள்ள உகரம் குறுகிற்று. எனவே யகரம் வர அது இகரமாய்த் திரிந்தது.

இனி, பெட்டி யாது, பொன்னி யாவள், என்பன போன்ற உதாரணங்களில், பெட்டி, பொன்னி என்னும் இவ்வார்த்தைகளின் ஈற்றிலுள்ள இகரம், குற்றியல் உகரம் திரிந்து ஆகிய இகரங்கள் அல்ல. வார்த்தையே இகரத்தில் முடிகின்ற வார்த்தைகள் அவை. ஆகையால் பின்னே, யாது யாவள் என யகரத்தில் துவக்குகின்ற சொற்கள்வருவதால் பெட்டிபொன்னி என்னும் சொற்களின் ஈற்றிலுள்ள இகரங்கள் குற்றியலிகரம் ஆகமாட்டா.

ஆதலால், யகர வரிசையைச் சேர்ந்த எழுத்துக்களை முதலில்உள்ள சொல் பின்வருவதால் குற்றியலுகரம் இகரமாகத்திரிய அவ்விகரம் குற்றியலிகரம்ஆம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். இன்னொரு இகரமும் குற்றியலிகரம். அது மியா என்ற அசைச்சொல்லில் ம் என்னும் மெய்யின்மேல் ஏறியிருக்கும் இகரம். இந்தச் சொல் யாரையாவது முன்னிலைப் படுத்திப் பேசும்போது கேண்மியா, சென்மியா, உண்மியா, எனச் சேர்த்துக்கொள்கின்ற இடைச்சொல். இதற்குத் தனியாக வொன்றும் பொருளில்லை. கேள், சொல், உண், என்பதுதான் பொருள். இந்த மியா விலுள்ள இகரமும், குற்றியலுகரம் திரிந்து ஆன இகரத்தைப்போல், குற்றியலிகரமாம். இவைகளெல்லாம் அரைமாத்திரையே பெறுவதை உச்சரித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

யாப்பிலக்கணம்

[215-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—ஆசிரியப்பா.

இதுகாறும் வெண்பாவுக்குரிய இலக்கணத்தைப் பற்றிக் கற்றோம். இனி ஆசிரியப்பாவுக்குரிய இலக்கணத்தையும் அப் பாவின் வகைகளையும் பற்றிக் கற்போம்.

ஆசிரியப்பாவில், இயற்சீராகிய மாச்சீர் விளச்சீர்களும், காய்ச்சீர்களும், நிறை நடுவாகிய கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் வஞ்சிச்சீ ரொழிந்த மற்றக் கனிச்சீர்களும் வரும். எல்லாத் தளைகளும் அமையும். ஈரசைச்சீர் நின்று ஈரசைச்சீரோ டொன்றுவது சிறப்புடை ஆசிரியத் தளையாம். ஈரசைச்சீர் நின்று மூவசைச்சீரோ டொன்றுவது சிறப்பில் ஆசிரியத் தளையாம். சிறப்புடை ஆசிரியத்தளையால் அமையும் ஆசிரியப் பாவே சிறப்புடைத்தாம். ஆசிரியப்பாவில் குறளடி சிந்தடி அளவடி ஆகிய மூன்றும் பயின்று வரும். நெடிலடி அருகி வருதலும் உண்டு. அகத்திணையாகிய ஆசிரியப்பாவில் வஞ்சியடி வாராது; கலியடி விரவிவருதலும் உண்டு. ஆசிரியப்பா மூன்று அடிகளிற் குறைந்து வாராது. மூன்று அடிக்குமேல் பல அடிகளாலும் பொருந்தி வரும்.

ஆசிரியப்பா நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, அடி மறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும். ஆசிரியப்பாவிற்கு அகவற்பா என்னும் மற்றொரு பெயரும் உண்டு.

1. நேரிசை யாசிரியப்பா:—ஈற்றடிக்கு முன்னுள்ள அடி சிந்தடியாகவும் ஏனைய அடிகள் அளவடியாகவும் அமைந்து, ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ என்னும் அசைகளுள் ஒன்றை ஈற்றடியின் இறுதியிற் பெற்று வருவது நேரிசை ஆசிரியப்பாவாம். ஆயினும், ஏ என்னும் அசைச்சொல்லால் முடிவது சிறப்புடைத்தாம். இவ் வசையமைதி மற்ற மூன்று வகை ஆசிரியப்பாக்களுக்கும் பொருந்தும்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே."

2. இணைக்குற ளாசிரியப்பா:—முதலடியும் ஈற்றடியும் நாற்சீர் அடிகளாகவும், அவற்றுக்கு இடையில் வரும் அடிகள் இரண்டும் பலவும் குறளடியாகவும், சிந்தடியாகவும் நெடிலடியாகவும் வருவது இணைக்குறளாசிரியப்பாவாம். ஆதலின், இணைக்குறளாசிரியப்பாவுக்குச் சிறுமை நான்கடியும் பெருமை வரையறையின்மையுமாகும்.

(a) "நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே"

இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீரடியாகவும் இடையடிகள் குறளடி சிந்தடிகளாகவும் வந்தமை காண்க.

(a) "சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம்
எமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாம்
தானிற்கு மன்னே
நரந்தம் நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
அருங்கலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையு [ரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே.
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப்பா டுநரு மில்லை
பாடுந ருக்கொன் றீகுந ரு மில்லை
பனித்துறைப் பகன்றை நறைகொள் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயும் உயிர்தவப் பலவே"

இவ்விணைக்குறளாசிரியப்பாவில் குறளடியும் சிந்தடியும் இடையிடையே வந்தமை காண்க. இதிற் பதின்மூன்றும் அடி நெடிலடியாக அமைந்திருத்தல் காண்க.

3. நிலைமண்டில ஆசிரியப்பா:—எல்லா அடிகளும் அளவடிகளாகவே அமைந்து நடப்பது நிலை மண்டில ஆசிரியப்பா என வழங்கப்படும்.

"வேல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."

(நிலை மண்டில ஆசிரியப்பா என் என்னும் அசைச்சொல்லால் முடிவது சிறப்புடைத்து என அறிக. உதயணன் கதையிலும் மணிமேகலை கதையிலும் வந்துள்ள நிலை மண்டில ஆசிரியப்பாக்கள் இங்ஙனம் முடிந்திருத்தல் காண்க. மகர மெய்யை ஈற்றில் பெற்று முடியும் நிலைமண்டில ஆசிரியப்பாவும் உண்டு.)

4. அடி மறி மண்டில ஆசிரியப்பா:—எல்லா அடியும் முதல் நடு இறுதியாக நாம் கருதுகிறபடி அமைத்து உச்சரித்த போதிலும், ஓசையும் பொருளும் தவறாமல் வருவது அடி மறி மண்டில ஆசிரியப்பாவாம்.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே.
சூரர மகளிர் ஆரணங் கினரே.
வாரல் எனினே யானஞ் சுவலே.
சாரல் நாட நீவர லாறே.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெகுதி நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா 2-0-0

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும் (வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனர் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணு 0-6-0

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென்மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவாளுய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகு பெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருகூ பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரு 3-8-0.

1 காரியதரிசி, மலேய சைவசித்தாந்த சங்கம், குவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுவரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C. C. S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM
Purasawalkam, Madras.

வர்த்தமானம்

பர்னுர்ட் ஷா—இப்பொழுது இலங்கையில் தங்கியிருக்கின்ற பர்னுர்ட் ஷா கொழும்பில் ஒரு கூட்டத்தில் கூறியதாவது:—"உலகத்திலுள்ள எல்லாச் சர்வகலாசாலைகளையும் தரைமட்டமாக்கி, உப்பைத் தெளித்து உழுதுவிடவேண்டும். தற்காலச் சர்வகலாசாலைப் படிப்பு எங்கும் பரவியுள்ளது நாகரிக வளர்ச்சிக் குறிஎன்று பலர் எண்ணுவது தவறு. கல்வியில்லாத நாளில் உலகம் நன்கு நடைபெற்றது. கல்வி பரவியவுடன் மக்கள் கெட்டழிந்து விட்டார்கள்."

கல்லாத பேர்களே நல்லவர் நல்லவர் என்று நம் தாயுமானவர் புலம்பிய சொற்கள் நம் நினைவினிற்கு வரலாம்.

***

தனவணிகன்:—இரங்கூனில் பிரசுரமாகும் தனவணிகன் என்னும் வாரப்பத்திரிகையின் முதல் இதழ் வரப்பெற்ரேம். இது பொதுவாகத் தமிழ் மக்கள் நலத்தையும் சிறப்பாகத் தனவணிக வகுப்பினர் நலத்தையும் கருதி உழைக்கும் என்று அப்பத்திரிகையின் தலையங்கத்தில் கூறப்பெற்றிருக்கின்றது. இதன் வருட சந்தா உள்நாட்டிற்கு ரூ 5. வெளிநாட்டிற்கு ரூ 7.

***

பல்கலைக் கழகம்:—சென்ற வாரம் திருநெல்வேலியில் இளைஞர் சங்கத்தின் ஆதரவில் நடந்த ஒரு கூட்டத்தில் இராமநாதபுரம் ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் இராமஸ்வாமி சாஸ்திரியார் தலைமை வகித்தார். அப்பொழுது ஸ்ரீமான் S. ஸ்ரீகண்டன் என்பார் புராதன இந்தியாவிலிருந்த பல்கலைக்கழகங்களைப்பற்றியொரு பிரசங்கம் செய்தார். இந்தியாவில் பண்டையில் பல பல்கலைக் கழகங்கள் இருந்தனவென்றும், சீனுவிலிருந்தும் மாணவர்கள் இக்கழகங்களுக்கு வந்தனர் என்றும், அக்கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கு விடுதிகள் அமைக்கப்பெற்றிருந்தனவென்றும் கூறினர். தலைவர் முடிவுரையில் கூறியதாவது:—

"இப்பொழுது இந்தியாவில் ஏற்பட்டுள்ள பல்கலைக்கழகங்கள் மேனுட்டு முறைகளைத் தழுவியனவாயிருக்கின்றன. அமெரிக்காவில் ஏற்படுத்தப் பெற்றுள்ள பல்கலைக்கழகங்கள், அவைகளில் படிக்கும் இளைஞர்களுக்குப்பணம் சம்பாதிக்கும் முறைகளைப் பயிற்றுவிக்கும் நோக்கம் உடையன. இங்கிலாந்திலுள்ளவை மாணவர்களை அரசியல் வாழ்க்கைக்குப் பயிற்றுவிக்கும் தன்மையுடையன. மனிதனுடைய ஆன்மவாழ்வை அப் பல்கலைக்கழகங்கள் மறந்துவிட்டன. அம்மேனுட்டு முறையைத்தான் நம்கலாசாலைகள் பின்பற்றுகின்றன. மேனுட்டு முறைகளினுல் பயன் ஒன்று மில்லை. கடவுளின் அறிவிற்கு இடமிலாத படிப்பைக் காட்டிலும் படியாதிருப்பது நலமுடையதே. பண்டைய அறிவு ஏற்பட வேண்டுமானுல், நமது பண்டை முறைகளை நாம் கைப்பற்ற வேண்டும். இக்காலத்துக் கலாசாலை முறைகளினுல் மக்களின் வாழ்வு உயராது."

***

திருவாங்கூர் மன்னர்:—திருவாங்கூர் மன்னர், தமது தாயார், தம்பி, தங்கை முதலியவர்களுடன் ஏப்பிரல் மாத ஆரம்பத்தில் ஐரோப்பியப் பிரயாணத்திற்குப் புறப்படுவார் என்றும், திருவாங்கூர் ராஜ்யத்திற்கு ஆலோசனை கூறும் அதிகாரியான ஸர். C. P. இராமஸ்வாமி ஐயரும் இவர்களோடு செல்கின்ருர் என்றும் திருவாங்கூர்ச் செய்தி கூறுகின்றது.

***

R. K. ஷண்முகம் செட்டியாருக்குத் தலைவர்பதவி:- இந்தியச் சட்டசபைத் தலைவராயிருந்த ஸர் இப்ராஹிம் ரஹிமத்துல்லா என்பவர் உடல்நலத்தை உத்தேசித்துத்தமது பதவியை விடுத்தார். அந்த ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் R. K. ஷண்முகம் செட்டியார் போட்டியில்லாமல் தெரிந்தெடுக்கப் பெற்றுள்ளாராம்.

***

பூகம்பம்:—சென்ற வாரத்தில் அமெரிக்கா கலிபோர்னியாப் பகுதியில் பலமான பூகம்ப அதிர்ச்சி ஏற்பட, உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் அதிகம் என்று தெரிகின்றது. மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் உள்ள கால அளவில் 25 அதிர்ச்சிகள் ஏற்பட்டனவென்று கூறப்படுகின்றது. இப்பூகம்பத்தினுல் கஷ்டத்திற்குள்ளானவர்களுக்கு அரசாங்கத்தார் உதவி தந்துவருகின்றனர் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

தொத்து நோய்:—சிலோனில் பிளேக்கும், வைசூரியும் அதிகமாகப் பரவியிருக்கின்றதென்றும், பண்டாரவளையல் என்னுமிடத்திலும் இவ்விரு நோய்களின் கொடுமை அதிகம் என்றும், அதிகாரிகள் இவ்விடத்தில் சுகாதார முயற்சி செய்து வருகின்றனர் என்றும் இலங்கைச் செய்தி கூறுகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :		தைலங்கள்:	
பாதாமி லேகியம்	ரூ. 3-0-0	சந்தனதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0	அமிர்தாமலக ,,	0-12-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0	பிருங்காமலக ,,	0-12-0
குழந்தைகளுக்கு		ஸ்திரீகளுக்கு	
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை	0-4-0	ஸுதக டானிக்	2-0-0
பால சஞ்சீவினி	0-4-0	கர்ப்பாசய டானிக்	2-0-0
பால ஸுதா (டானிக்)	1-0-0	ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட்-டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச- சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணெ. காஸ்டராலதில்

ஜ்வரேக் ஸோல் எவ்வித ஜ்வரங்களுக்கும் ஏஜண்ட் யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு மதுரை

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
Reg. No. M. 2324.

கம்ப ராமாயணம்

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு
முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ. 5	0	0
அயோத்தியா காண்டம்	,, 5	0	0
ஆரணிய காண்டம்	,, 4	0	0
கிட்கிந்தா காண்டம்	,, 4	8	0
சுந்தர காண்டம்	,, 5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,, 10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

ஒரு முக்கிய சங்கீத நூல்

"வர்னமாலிகை".

சங்கீத ஆசிரியர்களுக்கும் கர்னாடக சங்கீதம் அப்பியசிக்கிறவர்களுக்கும் வேண்டிய நூல். ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் சங்கீத பாடசாலைகளிலும் இருக்க வேண்டியது. 40 ராகங்களுக்கு லக்ஷணங்கள் வரையப்பட்டிருக்கிறன. இதன் விலை அணா 12.

வி. ராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்டு ஸன்ஸ்,
292, எஸ்பிளனேட், மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS

covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)